# தொல்பொருள் ஆய்வுத்துறையின் அரிய கண்டுபிடிப்புகள்

# 1988 - 1998


தொகுத்தோர்

நடன. காசிநாதன்
இயக்குநர்

அர. வசந்தகல்யாணி
கல்வெட்டாய்வாளர்



வெளியீடு

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை
1998

வெளியீடு எண் : 139
பிரதிகள் 200—1998

© தொல்பொருள் ஆய்வுத்துறை

# தொல்பொருள் ஆய்வுத்துறையின் அரிய கண்டுபிடிப்புகள்

நூல் சேர்க்கை
எண்.

நடன. காசிநாதன்
இயக்குநர்
அர. வசந்தகல்யாணி
கல்வெட்டாய்வாளர்

விலை :

வெளியீடு :
தொல்பொருள் ஆய்வுத்துறை
தரமணி, சென்னை - 600 113

# நன்றியுரை

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியான தமிழ்நாட்டு மக்கள் தாம் வாழ்ந்த காலத்து எச்சங்களைப் பெருமளவில் விட்டுச் சென்றுள்ளார்கள் அத்தகைய சான்றுகள் இன்னமும் கண்டறியப்படாது மண்ணுக்குள் புதைந்தும், மலைகளிலும், மலையடிவாரங்களிலும், சிற்றூர்களிலும், பேரூர்களிலும் அவற்றின் இன்றியமையாமை அறியப்படாமலும் ஏராளமாக உள்ளன. காலப்போக்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாக அகழாய்வாளர்கள் கண்களுக்கும், வரலாற்றார்வலர்களின் பார்வைக்கும் வெளிப்பட்டு வருகின்றன

அவ்வாறு வெளிப்பட்டவைகளின் தொகுப்பே ''அரிய கண்டுபிடிப்புகள்'' என்னும் இச்சிறு நூல் ஆகும். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் இயக்குநர் முதல் அலுவலக உதவியர் ஈறாக, அனைத்துப்பிரிவு அலுவலர்களாலும் கண்டறியப்பட்ட அரிய தொல்பொருட்களின் பட்டியலே இத்தொகுப்பாகும். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பது பழமொழி. 'தொல்லியல் துறையின் காவலர், பெருக்குநரும் பல்லாயிரம் ஆண்டுக்கு முந்தைய தொல் பொருட்களைச் சேகரிப்பதில் வல்லவர்கள்' என்பது புதுமொழி. இத்தொகுப்பில் குறிக்கப்பெறும் தொல்பொருட்களைக் கண்டறிவதில் இத்துறையின் வாகன ஓட்டுநர்கள், நிழற்படக்கலைஞர்கள், கல்வெட்டுப்பிரிவினர், அகழாய்வுப்பிரிவினர், பாதுகாப்புப் பிரிவினர், அகழ்வைப்பகப் பிரிவினர், பதிவு அலுவலகப்பிரிவினர், கல்வெட்டுச் சிற்றெழுத்தர்கள், அலுவலக உதவியர்கள், தொழில்நுட்ப உதவியர் கள் என அனைத்துப் பிரிவு அலுவலர்களும் பேரார்வம் காட்டி நற்றுணை புரிந்துள்ளார்கள். இவ்வரிய கண்டுபிடிப்புகளை யார் யார் நிகழ்த்தியுள்ளார்கள் என்ற தொகுப்பும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. குறிப்பாக அச்சுப் பிரிவு அலுவலர்களும் குன்றா ஆர்வம் கொண்டு நன்றாக உழைத்து, ஆய்வாளர் மத்தியில் என்றும், நின்று நிலைக்கத்தக்க தொகுப்பை அருமையாக அச்சிட்டுத்துத் தந்துள்ளனர். ஆதலால் எம்துறை அனைத்துத் தரப்பு அலுவலர் களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி யடைகிறேன். இத்தொகுப்பை வெளிக்கொணர்வதில் துடிப்பாகச் செயல்பட்ட கல்வெட்டாய்வாளர் திருமதி. வசந்தகல்யாணி மாபெரும் செயல்திறன் படைத் தவர் என்பதை புலப்படுத்திவிட்டார். அவ்வார்வலருக்கு எனது உளம் நிறைந்த பாராட்டுகள். இந்நூல் ஆராய்ச்சியாளர்களுக்குச் சிறு துளியேனும் உதவியது என்று கேள்விப்படும்போது நான் இம்மண்ணுலகில் பிறந்த பேற்றினைப் பெற்றுவிட்டேன் என்று நெஞ்சு நிறை நிம்மதிப் பெருமூச்சு விடுவேன்.

அன்பன்

நடன. காசிநாதன்

# தொல்பொருள் ஆய்வுத்துறையின் அரிய கண்டுபிடிப்புகள்

## 1988 முதல் 1998 முடிய

| வரிசை எண் (1) | கண்டுபிடிக்கப் பட்ட பொருள் (2) | இடம் (3) | பொருளின் தன்மை (4) | காலம் (5) | குறிப்பு (6) | செய்தி வெளியான நாள் (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | பண்டைத்தமிழ்க் கல்வெட்டு | விக்கிரமங்கலம் திண்டுக்கல் மாவட்டம் | பாறையில் வெட்டப்பட்டுள்ளது | கி.பி. 2-3-ஆம் நூற்றாண்டு | ஏரயல் என்ற ஊரைச்சார்ந்த அரகாயதன் என்பான் கொடுத்த தானத்தைக் குறிக்கிறது. 'ஏரயல் அரகாயதன் செய்விதோன்' என்று பண்டைத் தமிழ் எழுத்துகளில் இக்கல்வெட்டு வாசகம் அமைந்துள்ளது. | 28-4-89 |
| 2. | ,, | இயற்கைக் குகைத்தளத்து நுழைவாயிலின் மேற்பகுதி, திருமலை. சிவகங்கை மாவட்டம் | ,, | கி.மு. 2-ஆம் நூற்றாண்டு | "எரகாடுரு காவிதிகன் கொறிய பளி" என்று எழுதப்பட்டுள்ளது. எரகாடூர் என்ற ஊரைச் சார்ந்த காவிதிகன் என்பான் செய்வித்த பள்ளி என்பது இதன் பொருள். இங்கு மற்றொரு கல்வெட்டும் உள்ளது. அது சிதைந்துள்ளது. | 20-1-90 |
| 3. | சிற்பம் | பொன்னூர், வேலூர் மாவட்டம் | கல் | கி.பி. 7-ஆம் நூற்றாண்டு | பல்லவர் காலத்தைச் சார்ந்த இவ்வரிய சிற்பத்தில் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய முப்பெருந்தெய்வங்களை ஒன்றிணைத்து ஒருருவமாகக் காட்டப்பட்டுள்ளது- இதனைத் "தத்தாத்ரேயர்" என்று வழங்குவர். | 23-6-89 |
| 4. | கல்தொட்டி | சிவன் கோயில் திருவல்லம், வேலூர் மாவட்டம் | கல் | கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு | நடனமாடும் பெண்ணுருவங்கள் நுட்பமான வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளன. | 23-6-89 |
| 5. | சிறு சிற்பத் தொகுதி | திருவாமாத்தூர், விழுப்புரம் மாவட்டம் | கல் | கி.பி. 7-ஆம் நூற்றாண்டு | லிங்கோத்பவர் (அ) திரிமூர்த்தி என்று கருதலாம். சிவபெருமான் லிங்க வடிவில் காட்டப்பட்டுள்ளார். விஷ்ணு, பிரம்மா இருவரும் சிவனது பக்கவாட்டில் அமர்ந்த நிலையிலுள்ளனர். | 4-3-90 |
| 6. | காசு | திருவான்மியூர், சென்னை | செம்பு | கி.பி. 5-ஆம் நூற்றாண்டு | காசின் முன்புறம் காளையின் உருவமும் மறுபுறம் சைத்ய மரமும் காட்டப்பட்டுள்ளன. | 17-8-89 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| 7. | காசுகள் | வரதராஜன்பேட்டை, கடலூர் மாவட்டம் | தங்கம் | தெலுங்குச் சோழர் விஜய நகர அரசர் | 'கண்ட' என்ற தமிழ் எழுத்து பொறிக்கப் பட்டுள்ளது. சூரியன், சந்திரன், வெண்கொற்றக் குடை ஒருபுறமும், வேணுகோபாலனின் உருவம் மறுபுறமும் காட்டப்பட்டுள்ளன. இது "கண்ட கோபாலன் மாடை" என்ற காசாக இருக்கலாம். மேலும் விஜயநகரர் 'பணம்' எனும் காசுகளும் கிடைத்துள்ளன. | 18-9-89 |
| 8. | பொம்மை | திருக்கோயிலூர், விழுப்புரம் மாவட்டம் | சுடுமண் | கி.பி. 8-ஆம் நூற்றாண்டு | யக்ஷன் உருவம் போலுள்ளது. கோவை மாவட்டம் போளுவாம்பட்டியிலும், தருமபுரி மாவட்டம் பனையக்குளத்திலும் ஏற்கெனவே கிடைத்துள்ள யக்ஷன் உருவங்களை ஒத்துள்ளது. | 23-9-90 |
| 6. | ஓவியம் | சிவன்கோயில், சித்தையன் கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் | சுவரோவியம் | பிற்காலப் பாண்டியர் காலம் கி. பி. 12-13 ஆம் நூற்றாண்டு | தக்ஷிணாமூர்த்தி, நடராஜர் உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. சில நாயன்மார்களுடைய புடைச் சிற்பங்களும் உள்ளன. | 2-2-89 |
| 10. | பொம்மைகள் | செக்கடிமேடு, தஞ்சாவூர், தஞ்சை மாவட்டம் | சுடுமண் | 18-ஆம் நூற்றாண்டு | வெளிநாட்டு வீரன், விநாயகர், காளை மற்றும் பறவையின் உருவம் ஆகியன கிடைத்துள்ளன. | 9-9-89 |
| 11. | பொம்மைகள் | அரவக்குறிச்சி, திருச்சி மாவட்டம் | சுடுமண் | கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டு | குழந்தையைத் தன் இடது பக்க இடுப்பில் ஏந்தியுள்ள தாயின் தோற்றம். மிகவும் இயற்கையாகச் செய்யப்பட்டுள்ளது. | 29-3-90 |
| 12. | நடுகல் | கெண்டியம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் | வட்டெழுத்தில் பொறிக்கப்பட்ட நடுகல் | கி.பி. 8-ஆம் நூற்றாண்டு | கருநந்தி என்ற வீரனின் வீரமரணத்தை இக்கல் வெட்டு தெரிவிக்கிறது. | 10-8-91 |
| 13. | பண்டைத்தமிழ்க் கல்வெட்டு | தொண்டூர், விழுப்புரம் மாவட்டம் | பாறையில் வெட்டப்பட்டுள்ளது. | கி.மு. 2-ஆம் நூற்றாண்டு | "சங்காயிபன் ஏவ அகஸ ஊரறம்மோசி செய்த அதிட்டனம்" என்று பண்டைத் தமிழில் எழுதப் பட்டுள்ளது. | 17-10-91 |
| 14. | நினைவுக்கல் | தேத்தாம்பட்டு, கடலூர் மாவட்டம் | கல் | கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டு | துர்க்கைக்குத் தன் சிரம் தந்த வீரனுக்கு நினைவுக் கல் எடுக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. | 29-9-91 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 15. | ஓவியம் | பெரியநாயகி அம்மன் கோயில், பழநி | சுவர் | கி.பி. 18-ஆம் நூற்றாண்டு | அரச ஊர்வலம் தொடர்பான காட்சிகள் எழிலோவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. | |
| 16. | நடுகல் | கமலாபுரம் மலை, வேலூர் மாவட்டம் | கல் | 9-10 ஆம் நூற்றாண்டு | பசுக்கூட்டங்களைப் பகைவரிடமிருந்து மீட்கப் போரிட்டு இறந்த வீரனின் நினைவாக எடுக்கப்பட்டது என்பதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது. | 20-11-92 |
| 17. | சிற்பம் | சிங்கவரம், விழுப்புரம் மாவட்டம் | கல் | கி.பி. 7-ஆம் நூற்றாண்டு | துர்க்கையின் எழிலான சிற்பம், சங்கு, சக்கரம் கரங்களில் அம்பு, வில், வாள் ஆகியன ஏந்திய நிலையில், மானும் சிங்கமும் இடது, வலது தோள்களுக்கு மேலே காட்டப்பட்டுள்ளன. இருபுறமும் வாளேந்திய வீரர் உருவங்கள் காணப்பெறுகின்றன. | 31-12-92 |
| 18. | சிற்பம் | ஆனாங்கூர், கடலூர் மாவட்டம் | கல் | கி.பி. 7-ஆம் நூற்றாண்டு | யானை மீதமர்ந்த இவ்வுருவம் இந்திரன் (அ) முருகனாக இருக்கலாம். | |
| 19. | நடுகல் | வங்கட்டூர், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம் | கல் | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு | நான்கு நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் போரில் இறந்துபட்டதை இவை நான்கும் தெரிவிக்கின்றன. | |
| 20. | நடுகல் | கூடநகரம், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம் | கல் | கி.பி, 10 ஆம் நூற்றாண்டு | மூன்று நடுகற்கள் கிடைத்துள்ளன. முதற் கல்வெட்டு பரகேசரிவர்மனுடையது. அடுத்தது மாவலி வாணாதிராயன் காலத்தது. மூன்றாம் கல்வெட்டு சிதைந்துள்ளது. | |
| 21. | நினைவுக் கல் | சேம்பள்ளி, வேலூர் மாவட்டம் | கல் | கி.பி. 15-16 ஆம் நூற்றாண்டு | காளை ஒன்றும் புலியும் செதுக்கப்பட்டுள்ளன. புலியோடு போரிட்டுக் காளை இறந்து பட்டிருக்கலாம். "தச்சன் புதூரன் இஷ்ஷபம்" என்று கல்வெட்டு வாசகம் காணப்படுகிறது. | |
| 22. | டேனிஷ் அச்சுக் குத்தப் பெற்ற காசு | தனிப்பட்டவரிடமிருந்து சேகரிக்கப்பட்டது | ஈயம் | கி.பி. 17-ஆம் நூற்றாண்டு | டேனிஷ் மன்னன் ஐந்தாம் கிறிஸ்டியன் வெளியிட்ட டி.டி.சி. காசு (D.D.C) என்று பொறிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் சி 5 என்று அரசனின் பெயர் குறுக்கி எழுதப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அச்சுக் குத்தப்பெற்ற டேனிஷ் காசு கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும். | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 23. | சீனக்குடுவை | தரங்கம்பாடி கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டது, நாகப்பட்டினம் மாவட்டம் | செலிடான் | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு | சோழப்பெருவேந்தர் காலத்தே சீனாவுக்கும் தமிழ் நாட்டுக்கும் இருந்த வணிக மற்றும் கலாசாரத் தொடர்பு இதன் மூலம் உறுதிப்படுகிறது. | |
| 24. | காசு | காட்டுச்சேரி, நாகை மாவட்டம் | செம்பு | கி.மு. 3-2-ஆம் நூற்றாண்டு | யானை உருவம் பொறிக்கப்பட்ட சதுரக்காசு. | |
| 25. | சிற்பங்கள் | அரியாங்குண்டு, இராமேஸ்வரம் | கல், செம்பு | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு | வெள்ளைக்கல்லால் செய்யப்பட்ட அமர்ந்த நிலையிலுள்ள புத்தர் சிலை மற்றும் அவலோகிதேஷ்வரரின் செப்புச்சிலையும் கண்டறியப்பட்டுள்ளது. | 9-4-92 |
| 26. | கல்வெட்டு | துவாக்குடி, திருச்சி மாவட்டம் | கல் | கி.பி. 11-ஆம் நூற்றாண்டு | முதற்குலோத்துங்கன் கல்வெட்டு மதகில் காணப்படுகிறது. இம்மதகை எடுப்பித்த உலகவிடங்கப் பேரரையன் என்பானுக்கு ஊரார் நிலக்கொடை அளித்ததையும், இவ்வூரின் பழைய பெயர் துவிக்குடி என்பதையும் கல்வெட்டு கூறுகிறது. | |
| 27. | மோதிரம் | கரூர், திருச்சி மாமட்டம் | தங்கம் | கி.மு. 2-ஆம் நூற்றாண்டு | 'தாயன் ஓதலன்' என்று எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ளது. | 15-3-91 |
| 28. | மோதிரம் | கரூர், திருச்சி மாவட்டம் | வெள்ளி | கி.பி. 2-ஆம் நூற்றாண்டு | 'பேரவதான்' என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. | |
| 29. | காசு | கரூர், திருச்சி மாவட்டம் | வெள்ளி | கி.பி. 8-ஆம் நூற்றாண்டு | திமிலுடன் உள்ள காளையின் உருவமும், 'வபு' என்று கிரந்த எழுத்துகளும் காணப்படுகின்றன, மறுபுறம் சங்கும், விளக்கும் உள்ளன. | 6-1-91 |
| 30. | காசு | நீராவி | தங்கம் | முதலாம் இராசராசன் | காசின் ஒருபுறம் 'உரக' என்று தேவநாகரியில் எழுதப்பட்டுள்ளது. மறுபுறம் ஈழ மனிதனின் நின்ற தோற்றமும் காட்டப்பட்டுள்ளது. | 15-10-88 |
| 31. | செப்பேடு | மப்பேடு, செங்கை மாவட்டம் | செம்பு | கி.பி. 16-ஆம் நூற்றாண்டு | விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவராயன் காலத்தில் அளிக்கப்பட்ட தானத்தைக் குறிக்கிறது. | |
| 32. | ஓவியம் | திருவரங்கம், திருச்சி மாவட்டம் | சுவர் | கி.பி. 18-ஆம் நூற்றாண்டு | கிருஷ்ணன், விஷ்ணு அவதாரங்கள் தீட்டப்பட்டுள்ளன. | 15-11-91 |
| 33. | பொம்மை | மேலப்பெரும்பள்ளம் | தாழியின் ஒரு பகுதி | கி.பி. 3-4-ஆம் நூற்றாண்டு | தாழியின் கழுத்துப் பகுதியில் பெண் தெய்வத்தின் உருவம் காணப்படுகிறது. | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 34. | கல்வெட்டு | ஒழுகையூர், வேலூர் மாவட்டம் | பலகைக்கல் | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு | முதலாம் பராந்தகன் காலத்தில் அமைக்கப்பட்ட மதகைப் பற்றிக் குறிப்பிடுகிறது. கஜலட்சுமியின் பழமையான உருவமும் செதுக்கப்பெற்றுள்ளது. | 7-3-91 |
| 35. | பலகைச்சிற்பம் | வலையத்தூர், வேலூர் மாவட்டம் | கல் | கி.பி. 6,7-ஆம் நூற்றாண்டு | மகிடன் மீது நின்ற நிலையில் காணப்படும் அழகிய துர்க்கைச் சிற்பம் | 6-9-90 |
| 36. | சிற்பம் | கண்டம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் | கல் | கி.பி. 8-ஆம் நூற்றாண்டு | அமர்ந்த நிலையில் காணப்படும் விநாயகரின் உருவமும், அவரெதிரே வாழைப்பழமும், தேங்காயும் காட்டப்பட்டுள்ளன. | 19-8-90 |
| 37. | சிற்பம் | அழகூர், செங்கை மாவட்டம் | கல் | கி.பி. 7-ஆம் நூற்றாண்டு | நின்ற நிலையிலுள்ள துர்க்கையின் சிற்பம். முழங்காலுக்குக் கீழே உடைந்துள்ளது. | |
| 38. | கல்வெட்டு | குண்டூர், திருச்சி மாவட்டம் | கல் | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதலாம் ஆதித்தன் | குண்டூரைச் சார்ந்த மாறன்குவாவன் என்பான் இம்மதகை அமைத்தான் என்பதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. | 12-6-90 |
| 39. | திருமேனி | திருவானைக்கா, திருச்சி மாவட்டம் | பஞ்சலோகம் | கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டு | திரிபங்க நிலையில் நப்பின்னையின் நின்ற உருவமும், அவளின் இடக்கை பணிப்பெண்ணின் தலைமேல் வைக்கப்பெற்றும் காணப்படுகிறது. | |
| 40. | செப்பேடு | திருக்கோயிலூர், விழுப்புரம் மாவட்டம் | செம்பு | கி.பி. 1633 | வலங்கை இடங்கைக்காரர்களுக்குள் ஏற்பட்ட பூசல் பற்றிக் குறிப்பிடுகிறது. வன்னியர்களின் பூர்வீகம் பற்றியும் குறிக்கப்பட்டுள்ளது. | |
| 41. | கல்வெட்டு | தஞ்சாவூர், தஞ்சை மாவட்டம் | தூண் | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு இராசராசன் காலம் | முதலாம் இராசராசனின் விருதுகளைக் கூறும் மூன்று கல்வெட்டுகள். தமிழ் எழுத்தில் எழுதப் பட்ட வடமொழிக் கல்வெட்டு. இவ்வகையில் தமிழகத்தில் இது ஒன்றுதான் கிடைத்துள்ளது. | |
| 42. | சிற்பம் | மேலப்பெரும்பள்ளம் | கல் | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு | உத்குடிகாசனத்தில் அமர்ந்த அய்யனாரின் உருவம். | 7-12-88 |
| 43. | கல்வெட்டு | மரக்குணம், திருவண்ணாமலை மாவட்டம் | கல் | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு | முதலாம் ஆதித்தன் காலக் கல்வெட்டு. 'உவாஎர்' என்ற புதிய சொல் காணப்படுகிறது. எனவே முதல் உழவுக்கு அளிக்கப்பட்ட சிறப்புச் சலுகையைக் கூறுவதாக இருக்கலாம். | 17-4-92 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 44. | காசு | அழகன்குளம், இராமநாதபுரம் மாவட்டம் | செம்பு | ஆர்கேடியஸ் கி.பி. 395 முதல் 408 முடிய | ஒருபுறம் அரசனின் தலையும், (D.N.A)RCADIVS என்று எழுதப்பட்டும்: அமர்ந்த நிலையில் ஓர் உருவம் கையில் குழந்தைபோல் ஒன்றை ஏந்தி யுள்ளது போன்றும் தெரிகிறது. மிகவும் சிதைந்து காணப்படுகிறது. | |
| 45. | நடுகல் | இனாம்குளத்தூர், திருச்சி மாவட்டம் | கல் | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு | முதலாம் ஆதித்தன் காலக் கல்வெட்டு. பசுக்கூட்டங் களைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்ட பூசலில் கொற்றம்பூண்டி என்பவன் இறந்துபட்டதை இக்கல் வெட்டு தெரிவிக்கிறது. | 4-1-92 |
| 46. | செப்பேடுகள் (நான்கு) | சிவகாசி, நெல்லை மாவட்டம் | செம்பு | கி.பி. 18-ஆம் நூற்றாண்டு | கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் வன்னியர், யாதவர், மீனவர் ஆகியோரின் சமுதாயச் சூழல் பற்றித் தெரிவிக்கின்றன. | 21-10-92 |
| 47. | காசுகள் | வாலாந்தரவை, இராமநாத புரம் மாவட்டம் | செம்பு | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு | மாறவர்மன் சுந்தரபாண்டியனுடைய காசாக இருக்கலாம். | 25-11-89 |
| 48. | ஓவியங்கள் | வண்ணான்பாறை, நீலகிரி மாவட்டம் | பாறை | கி.மு. 2-ஆம் நூற்றாண்டு | வெள்ளை வண்ணத்தில் தீட்டுப்பட்டுள்ளது | 5-4-91 |
| 49. | கல்வெட்டு | ஓங்கூர், விழுப்புரம் மாவட்டம் | கல்தூண் | கி.பி. 744 | இரண்டாம் நந்திவர்மபல்லவன் காலத்திய இக்கல்வெட்டு மதகு அமைத்ததைக் கூறுகிறது | 20-7-90 |
| 50. | கல்வெட்டு | சிதம்பரம், கடலூர் மாவட்டம் | கிளிஞ்சல் | கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டு | புனித குரானின் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. | 28-7-90 |
| 51. | விலங்கு | மணியம்பாடி, தருமபுரி | பஞ்சலோகம் | கி.மு. 500 | பெருங்கற்காலத்தைச் சார்ந்த மான் ஒன்றின் உருவம் | 10-3-91 |
| 52. | சிற்பங்கள் | சோழபுரம், செங்கை மாவட்டம் | கல் | கி பி. 16-ஆம் நூற்றாண்டு | கோயிலின் தரைப்பகுதிகளைச் சீராக்கும்போது திருமால், திருமகள் ஆகியோரின் உருவங்கள் கிடைத்தன. | 14-12-89 |
| 53, | கட்டடப்பகுதி | திருமலைநாயக்கர் அரண்மனை, மதுரை | செங்கற் கட்டடம் | கி.பி 17-ஆம் நூற்றாண்டு | சுவர்க்க விலாசத்தின் மேற்குப் பக்கம் புதிய கட்டடப்பகுதி கண்டறியப்பட்டுள்ளது. | |
| 54. | சிற்பம் | குண்டூர், திருச்சி மாவட்டம் | கல் | கி பி. 10-ஆம் நூற்றாண்டு | அய்யனார் சிற்பம் உள்ளது. இதன் பீடத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத் தினை அளித்தவன் குவாவன்சாத்தன் என்பான். | |
| 55. | பொம்மை (குழந்தையும் தாயும்) | வெங்கடசமுத்திரம், தருமபுரி மாவட்டம் | சுடுமண் | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு | தாய் குத்துக்காலிட்டுத் தனது சேய்க்குப் பாலூட் டுவது போன்று மிகுந்த கலைத்திறனுடன் செய்யப் பட்டுள்ளது. | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| 56. | புதிய கற்காலக் கருவிகள் | செலமலை கிராமத்தைச் சார்ந்த குள்ளக்கோம்பை, மதுரை மாவட்டம் | கல் | 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது | போடிநாயக்கனூர் அருகே மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் செலமலை கிராமத் தலையாரி மகாலிங்கம் தன் நிலத்தினைத் தோண்டி வேலை செய்யும்போது இக்கருவிகள் கிடைத்தன. இவை சுமார் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. | |
| 57. | நடுகல் | கமலாபுரம், குடியாத்தம் வட்டம், வடார்க்காடு மாவட்டம் | கல் | கி.பி. 9-10ஆம் நூற்றாண்டு | வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் வட்டம் கமலாபுரத்திலுள்ள மலையடிவாரத்தில் ஒரு நடுகல் உள்ளது. வீரன் தனது வலது கரத்தில் வாளும், இடது கரத்தில் நீள் சதுரக் கேடயமும் கொண்டு, தலைப்பாகையுடன் கம்பீரமாகக் காணப் படுகிறான். தோற்றத்தைப் பார்க்கும்போது இவ் வீரன் பாணர் அல்லது கங்கர் போன்ற சிற்றரசர் களின் கீழ் பணியாற்றியவனாக இருத்தல் கூடும் என்று தோன்றுகிறது. | 20-11-92 |
| 58. | துர்க்கைச்சிற்பம் | சிங்கவரம், விழுப்புரம் மாவட்டம் | கல் | கி.பி. 7-ஆம் நூற்றாண்டு | உருவ அமைப்பைக் கொண்டு பல்லவர் காலத்த தாகக் கருதத்தகும் இச்சிலை, பல்லவர் காலச் சிற்பங்களின் அனைத்துக் கலையம்சங்களையும் பெற்றுள்ளது. தன் வாகனங்களாகிய சிம்மத்தையும் மானையும் ஒருங்கே கொண்டு விளங்கும் இச்சிலை அற்புதமான படைப்பாகும். | 31-12-92 |
| 59. | பண்டைய பூம்புகார் குறித்த சான்றுகள் | பூம்புகார், நாகை மாவட்டம் | கடலாய்வு | ... | வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மை நகரமாகப் பூம்புகார் விளங்கியதற்கான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூம்புகாரில் தற்போது அமைந்துள்ள கலங்கரை விளக்கத்திற்கு அருகாமை யில் கடற்கரைப்பகுதியில் தொடர்ச்சியான கட்டடப் பகுதிகளும் மற்றும் சுமார் 5 கி.மீ. தொலைவில் கட லுள் 70 அடி ஆழத்தில் சில கட்டடப் பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கருப்பு சிவப்புப் பானை யோடுகள் மதுக்குடுவைப் பானையோடுகள் மற்றும் செங்கல் துண்டுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்தத் தொல்பொருட்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இக்கட்டடப் பகுதிகள் கி.மு. 500, கி.பி. 400 ஆகிய இடைப்பட்ட காலத்தைச்சார்ந்ததாகும் எனத் தெரிகிறது. தரை தட்டிய கப்பல் உள்ள பகுதியில் ஆய்வு செய்தபோது 1·25 மீ. நீளமுடைய இரும்பு பீரங்கி ஒன்றும், இரும்பு மற்றும் செம்பாலான ஆணி களும் மரச்சட்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 60. | நடுகற்கள் | கூடநகரம், வேலூர் மாவட்டம் | கல் | கி.பி. 9-10ஆம் நூற்றாண்டு | முழுமையாகக் கிடைத்துள்ள இரண்டு கல்வெட்டு களுள் ஒன்று சகம் 826 (கி.பி. 903)ச் சார்ந்த மாவலி வாணராயன் காலத்தது. கூடநகரிலுள்ள ஏரியினைப் பராமரிப்பதற்காகக் கங்கர் சிறுமாரையன் என்பான் நிலத்தைத் தானமாகக் கொடுத்துள்ளான் என்பதை யும், தன் தலைமையன் மாவலிவரையன் விசையித்தைய னின் ஆட்சிக்காலத்தில் இவன் அடையறு நாட்டை ஆண்டுள்ளான் என்பதையும் தெரிவிக்கிறது. | |
| 61. | சேட்டை | மேல் ஒலக்கூர், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம் | சுற்சிற்பம் | கி.பி. 6-7-ஆம் நூற்றாண்டு | இச்சிற்பத் தொகுதியில் குளிகன், மனிதத் தலை யுடன் வலக்கையில் கதையை தாங்கியிருப்பதாகக் காட்டப்பட்டுள்ளான். தாயின் இடப்பக்கத்தில் பெரிய அளவில் காட்டப்பட்டுள்ளதும், மாந்தி வலப்பக்கம் தாயின் தோளில் சாய்ந்து நின்று கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கன. மேலும் சேட்டை காலைத் தொங்கவிடாமல் மடித்து வைத் திருப்பதும் குறிப்பிடத்தக்கது. | 19-5-94 |
| 62. | நடுகல் | செண்டியம்பாக்கம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் | கல் | கி.பி- 7-ஆம் நூற்றாண்டு | ஊரின் வடக்குத் திசையில் நிறுத்தப்பட்டுள்ள நடுகல். பலகைக்கல்லில் வீரனுடைய உருவமும் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. சிற்பத்தில் உள்ள வீரன் நேராக நின்ற நிலையில் காணப்படு கின்றான். வலக்கையில் நீண்ட கத்தியும் இடக்கை யில் கேடயமும் ஏந்தியுள்ளான். இடையையொட்டிக் குறுவாள் ஒன்று செருகப்பட்டுள்ளது. இவ்வீரனின் இருபுறமும் பெண்கள் இருவர் நின்ற நிலையில் உள்ளனர். இடப்புறப் பெண்ணின் அருகே குத்து விளக்கு காணப்படுகிறது. வீரனின் வலப்புறம் தலைக்கருகில் வட்டெழுத்தில் கல்வெட்டு ஆறு வரிகளில் காணப்படுகின்றது. ஒய்மா நாட்டு அருகாவூரைச் சார்ந்த வீரன் பசுக்கூட்டத்தைக் கவர்ந்து செல்ல முயன்றபோது வீரமரணம் எய்திய செய்தி எழுதப்பட்டிருக்கிறது. எழுத்தமைதி மற்றும் சிற்ப அமைதி கொண்டு இது கி.பி. 7-ஆம் நூற் றாண்டைச் சார்ந்தது என உறுதியாகக் கூறலாம். | 10-8-91 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 63. | சீனக்காசு | தரங்கம்பாடி, பொறையாறு வட்டம், நாகை மாவட்டம் | செப்புக்காசு | கி.பி. 1224-1236 | நடுவில் சதுர வடிவான துளையுடனும் அதனைச் சுற்றிலும் சீன எழுத்துகளுடனும் பெரிய, சிறிய காசுகள் கிடைத்துள்ளன. அளவில் பெரிய சீனக்காசு கி. பி. 1224-1236 ஆம் ஆண்டுகளுக்கு இடைப் பட்டது. இதில் ரீயுபின் டாங்க்போ (Ruipin Tongbao) என்று சீன மொழியில் எழுதப்பட்டுள்ளது. இதிலுள்ள ரீயுபின் என்ற சீனமொழிச்சொல் மங்கள கரமான அல்லது அமைதியான என்ற பொருளையும், டாங்க்போ என்பது பணம் என்ற பொருளையும், தருகின்றது. இது ஜீன் (Jin) வம்சத்தினைச் சார்ந்தது. சிறிய அளவிலான காசுகள் மிங் (Ming) வம்சத்தினைச் சார்ந்தவையாகும். இக்காசில் பேர ரசரின் பெயரான காங்ஸென் என்பதோடு பணம் என்ற பொருள் தரும் டாங்க்போ என்ற சொல்லும் இணைந்து 'காங்ஸென்டாங்போ' எனப் பொறிக்கப் பட்டுள்ளது. இதன் காலம் கி. பி. 1625-1644. மற்றொரு சீனக்காசும் (கி. பி. 1674-1676) மிங் வம்சத்தினைச் சார்ந்தது. இதில் யுமின் டாங்க்போ என்று காணப்படுகிறது. அதாவது மக்களை வளமையாக்கும் பணம் என்று பொருள். மேற் கண்ட காசுகள் தமிழகக் கடற்கரையோரப் பட்டி னத்தில் கிடைத்துள்ளதால் சீனத்திற்கும் தமிழகத் துக்கும் பண்டைய காலம் தொட்டே இருந்து வந்த பண்பாட்டு வணிக உறவு கி. பி. 11-ஆம் நூற் றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை நிலவி வந்ததை உணர்த்துவனவாயுள்ளன. | தொல்லியல் செய்திமடல் கோவை-1 மடல்-3 |
| 64. | கல்வெட்டு | வெண்ணூர், விருதுநகர் மாவட்டம் | கல் | சக ஆண்டு 1171 கி.பி. 1249 | 'முனைகலக்கிகள்' பேரால் ஆமன்னும் கிணறு, சாத்தன் மகன் கொற்றன் என்பவனால் அமைக்கப் பட்ட செய்தியைப் பாடல் வடிவிலுள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது. விலங்கினங்கள் நீரருந்த வறட்சி யான இப்பகுதியில் கிணறு அமைத்து அதனை இறைத்துத் தொட்டிகளில் நிரப்பிச் சேவை செய் துள்ளான் இக்கொற்றன். கல்வெட்டில் வரும் சக ஆண்டுக் குறிப்பு காலத்தை அறியப் பெரிதும் உதவுகிறது. | தொல்லியல் செய்திமடல் கோவை-1 மடல்-4 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 65. | எழுத்துப் பொறித்த முரசு | பிரம்மபுரீசுவரர் கோயில், திருக்கடலூர், நாகை மாவட்டம் | பயன்பாட்டில் இல்லாத முரசு | கி.பி. 1875 | கி.பி. 1875ல் சான்றோர் தெருவில் உள்ள பார்வதி அம்மன் கோயிலுக்கு, பகவதி நாடார் மகன் சிதம்பர நாடார் என்பவரால் செய்தளிக்கப்பட்டது. 'நகரா' என்று குறிக்கப்படும் இதனைச் செய்தவர் போத்தி ஆசாரி என்பார். | தொல்லியல் செய்தி மடல் கோவை-1 மடல்-4 |
| 66. | சூலக்கல் கல்வெட்டுகள் | கோணமலை அடிவாரம், ஆலம்பட்டி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் | சூலக்கல் | சகம் 1580 கி.பி. 1658 | முதல் கல்வெட்டு சகம் 1590ல் திருமலை சேதுபதி காத்தத் தேவர் ஆணையின்படி சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் கோயிலுக்குப் பிள்ளையார் ஆலம்பட்டி என்ற கிராமத்தை சர்வமானியமாகக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. சேதுபதிகளின் செல்வாக்கு சிங்கம்புணரி வரை இருந்ததை இக்கல் வெட்டு வெளிப்படுத்துகிறது. இரண்டாம் கல்வெட்டு முத்திலிங்க நாயக்கர் என்ற நத்தம் பாளையப்பட்டு நாயக்கர், அவரது காணியான மேற்சொன்ன பிள்ளையார் ஆலம்பட்டியைச் சிங்கம் புணரி சேவுகப்பெருமாளுக்குக் கொடுத்ததைக் குறிக்கிறது. | தொல்லியல் செய்தி மடல் கோவை-1 மடல்-4 |
| 67. | முற்காலப் பாண்டியர் காலக் குடியிருப்புகள் | கல்லூரணி, அருப்புக் கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம் | பாண்டியர்காலக் குடியிருப்புகள் மற்றும் கற்சிற்பங்கள் | கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டு | முற்காலப் பாண்டியர் காலக் குடியிருப்புகள் இருந்த தடயங்கள் கிடைத்துள்ளன. இவ்வூரின் வழியாக மதுரையிலிருந்து இராமேசுவரத்திற்கு மதுரை நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்ட 'மங்கம்மாள் சாலை' செல்கிறது. இவ்வூர் மேனிலைப்பள்ளி அருகில் கி.பி. 3,4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஏராளமான பானையோடுகள் கருப்பு - சிவப்பு மற்றும் கருப்பு வண்ணங்களில் கிடைக்கின்றன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருமால் சிலையும், கற்களால் ஆன தொன்மையான கிணறும், கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டினதான நேர்த்தியான அய்யனார் சிற்பமும் காணப்படுகின்றன. | |
| 68. | தூண் | தூய யோவான் வெஸ்ட்ரி ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி, திருச்சி, திருச்சி மாவட்டம் | கல்தூண் | கி.பி. 11-ஆம் நூற்றாண்டு | திருமண்டபம் ஒன்றினை வண்டாழை வேளூர்க் கிழவன் நாராயணன் காறை கற்பகம் என்பான் செய்வித்ததை, ஆறு வரியிலமைந்த சோழர்காலத் தூண் கல்வெட்டு தெரிவிக்கிறது. | தொல்லியல் செய்தி மடல் கோவை-1 மடல்-5 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 69. | பௌத்த சிற்பம் | எல்லையம்மன் கோயில், திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம் | பால்நாடு கல் | கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டு | சென்னை மாநகரில் இது இரண்டாவதாகக் கிடைக்கும் பௌத்த சிற்பமாகும். இரண்டு வரிசையில் மக்கள் புத்த ஸ்தூபத்தை வணங்கச் செல்வது போல இச்சிற்பத் தொகுப்பு உள்ளது. மேல்வரிசையில் ஆண்கள் இடுப்பளவு காட்டப்பட்டுள்ளனர். கீழ் வரிசையில் மூன்று ஆண்கள் வணங்கிய கோலத்தில் இடைக் கச்சை மட்டும் அணிந்து காணப்படுகின்றனர். காதுகளில் வட்டக் குழைகள் அணி செய்கின்றன. | 29-7-94 |
| 70. | யானைச் சிற்பக்கல் | திருவாசி, திருச்சி மாவட்டம் | பலகைக்கல் | ... | பலகைக்கல்லில் சிற்பங்கள் காணப்படுகின்றன. சிற்பங்கள் இரண்டு பகுதிகளாக உள்ளன. மேற்பகுதியில் இரண்டு குத்து விளக்குகளிடையே ஒரு யானையும் கீழ்ப்பகுதியில் குத்துவிளக்கு, சுருண்டு நிமிர்ந்த பாம்பு, அரிவாள், வாள், கோடரி ஆகியவையும் உள்ளன. இவையனைத்தும் புடைச்சிற்பங்களே. | தொல்லியல் செய்தி மடல் கோவை-1 மடல்-7 |
| 71. | சிற்பம் | சொர்க்கப்பள்ளம், கங்கைகொண்டசோழபுரம், பெரம்பலூர் மாவட்டம் | கற்சிற்பங்கள் | பல்லவர் காலம் | திருமால், திருமகள் சிற்பங்கள் நிலத்தில் புதையுண்டிருந்தது. இவை பல்லவர் காலத்து நேர்த்தியான சிற்பங்கள். | தொ.செ.ம. கோவை-2 மடல்-1 |
| 72. | கல்வெட்டு | தொப்பூர், தருமபுரி மாவட்டம் | கல் | கி.பி. 16 - 17-ஆம் நூற்றாண்டு | வயலில் நடப்பட்டுள்ள கல்லில் ஆறுவரிக் கல்வெட்டும், கல்வெட்டின் கீழ் சிற்பமும் காணப்படுகின்றன. அந்தணர் ஒருவர் தாழைக் குடையுடன் நிற்கும் உருவமும், சூரியன், சந்திரன் உருவங்களும் கல்வெட்டின் கீழ் செதுக்கப்பட்டுள்ளன. கி.பி. 16 - 17-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ள இக்கல்வெட்டில் கேஸரிந்தா ராஜ்யம் என்ற பகுதியை ஆள்பவர்கள் ஹுசோபூரில் அக்ரஹாரம் ஒன்றைத் தர்மமாக ஏற்படுத்தியுள்ளனர் என்று குறிக்கப்பட்டுள்ளது. | தொ.செ.ம. கோவை-2 மடல்-2 |
| 73. | கல்வெட்டு | வெண்மந்தை, வந்தவாசி வட்டம், வேலூர் மாவட்டம் | பாறையில் செதுக்கப் பட்டுள்ளது | கி.பி. 940 | முதலாம் பராந்தகனின் 33வது ஆட்சியாண்டில் வெண்பழந்தை என்ற பெயருடைய இவ்வூரில் ஏரிப் பட்டியாக நிலம் ஒதுக்கித் தூம்பு அமைத்துப் புதிய நிலங்கள் வேளாண்மைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதனைச் செய்தவன் சேரர் தலைநகரான கருவூரின் தலைமகன் ஆவான். ஆதித்த சோழன் காலத்தில், சேர நாடு மற்றும் கொங்கு | 21-4-95 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்டுத் தலைவர்கள் சோழராட்சியை ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் சோழர் ஆட்சிப் பரவலுக்கும் உதவியிருக்கின்றனர். அதன் காரணமாக அவர்களுக்குத் தொண்டை நாட்டிலும் சிறப்பிடம் கிடைத்திருக்கிறது என்பதை இக்கல்வெட்டு உணர்த்துகிறது. | |
| 74. | உறை கிணறுகள் | முருகஞ்சேரி, திருவள்ளூர் மாவட்டம் | சுடுமண் | கி.பி. 13 - 14 ஆம் நூற்றாண்டு | தெலுங்கு - கங்கை வாய்க்கால் வெட்டும் பணியின் போது முருகஞ்சேரி என்ற கிராமத்தில் அடுத்தடுத்து இரண்டு உறை கிணறுகள் இருந்தமை அறியப்பட்டுள்ளன. சுடுமண்ணாலான இக்கிணற்று உறைகள் 15 செ.மீ. உயரமும் 6 செ.மீ. பருமனும் கொண்டவை. | |
| 75. | மகாவீரர் சிற்பம் | ஆலந்தூர், திருநின்றவூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம் (அடிதாங்கல் என்ற பகுதியில்) | கல் | கி.பி. 12ஆம் நூற்றாண்டு | 53 செ.மீ. உயரமுடைய மகாவீரர் சிற்பம் கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம். இதன் முகப்பகுதி சிதைந்துள்ளது. அரியாசனத்தில் அமர்ந்த நிலையில் மகாவீரர் காட்டப்பட்டுள்ளார். ஆலந்தூரில் சிற்பம் கிடைத்துள்ள பகுதி 'அடிதாங்கல்' என்றிருப்பது திருவடிகளைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. இச்சிற்பம் தற்பொழுது தமிழக அரசு தொல்பொருளாய்வுத்துறை பூண்டி அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வரப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. | தொல்லியல் செய்தி மடல் கோவை-1 மடல்-6 |
| 76. | கல்வெட்டுகள் | வீரகேரளம் புதூர், திருநெல்வேலி மாவட்டம் | சிற்றாற்றின் குறுக்கே உள்ள கல் | கி.பி. 1642, 1784 | கி.பி. 1642ஆம் ஆண்டில் வடமலையப்ப பிள்ளை இவ்வணையை அமைத்தார் என்பதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டு கி.பி 1784ல் கும்பினி ஆட்சியில் மேஜர் அயிலிசு இறிவன் என்பவர் இவ்வாற்றுப் போக்கில் அணையைப் புதிப்பித்த செய்தியையும், அணையின் ஒரு பகுதியைக் கட்டியதையும் குறிப்பிடுகிறது. | தொ.செ.ம. கோவை-3 மடல்-2 |
| 77. | எல்லைக் கற்கள் | ஆதனூர், கடலூர் மாவட்டம் | கல் | கி.பி. 13ஆம் நூற்றாண்டு | கி.பி. 13ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் 'ஆடுதுறை குற்றம் பொறுத்தவர்' என்னும் வாசகங்கள் எழுதப்பட்டுச் சூலம் பொறித்துக் காணப்படுகிறது. | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 78. | பாறை ஓவியங்கள் | ஆலங்காயம், வேலூர் மாவட்டம் | பாறைக்கல் | வரலாற்றுக்கு முற்பட்ட காலம் | ஆலங்காயம் மலைப்பகுதியில் ஒரு பாறைச் சரிவில் வெண்ணிறத்தில் கோட்டுருவமாக நால்வர், இருவர் இருவராக மனிதர்கள் கைகோத்திருக்கும் ஓவியம். ஒரு விலங்கின் மீது ஒருவர் நிற்கும் ஓவியம், திரிசூலம், சூரியன், புள்ளிகளுடன் குறியீடுகள், செதில்கள் மற்றும் உடல் எலும்புகள் தெரிவது போன்று காணப்பெறும் மீன் ஆகியவை வரையப் பட்டுள்ளன. வேலூர் மாவட்டப் பகுதியில் ஏற்கனவே கண்டறியப்பட்ட சென்னராயன் பள்ளி, சந்திரபுரம், இரத்தினகிரி ஓவியங்களுடன் இதுவும் தொல்லியலுக்குப் புதிய சேர்க்கையாகும். | தொல்லியல் செய்தி மடல் கோவை-3 மடல்-5 |
| 79. | கல்வெட்டு | வடக்கநந்தல், சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் | கோயிலிலுள்ள கல் | கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டு | இக்கல்வெட்டு உலகம் காத்த வாணகோவரையர் என்ற வாணர்குல மன்னரின் எட்டாவது ஆட்சி யாண்டைச் சார்ந்தது. இக்கல்வெட்டு சோழர்கால இறுதியில் குழப்பமான நிலை நிலவியதால் சமுதா யத்தில் ஏற்பட்ட பிணக்குகளைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. | தொ.செ.ம. கோவை-3 மடல்-5 |
| 80. | கல்வெட்டு | வல்லம், வந்தவாசி வட்டம், திருவண்ணா மலை மாவட்டம் | கல் | கி.பி. 14-ஆம் நூற்றாண்டு (1337-62) | இராசநாராயண சம்புவராயர் (கி.பி. 1337-62) தமது எட்டாம் ஆட்சியாண்டில் பிராமணருக்குக் கொடை நல்கியது குறித்த செய்தியை இது தெரிவிக் கிறது. இதுவரை கண்டறியப்படாத கல்வெட் டாகும். | தொ.செ.ம. கோவை-3 மடல்-5 |
| 81. | பொம்மை | கல்லூரணி கிராமம், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம் | சுடுமண் | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு | நான்கு அங்குல உயரமுள்ள இச்சுடுமண் பொம்மை சீன தேசத்து வியாபாரிகள் தாங்கள் வைத்திருந்த தெய்வ உருவச் சிலையாகும். இத்தெய்வம் சீன நாட்டில் தாரா என்றழைக்கப்படுகிறது. நன்கு பளபளப்பாக்கப்பட்ட இத்தெய்வச் சிலையின் கழுத்தில் அணிகலன்கள் அழகுறச் செதுக்கப் பட்டுள்ளன. காதுகளில் குண்டலங்கள் அழகு செய்கின்றன. வட்ட வடிவமான முகத்துடன் சிரித்த நிலையில் காணப்படுகிறாள். தலையில் கொண்டைப்பகுதி உடைந்துள்ளது. கால் பகுதி களும் சிதைந்துள்ளன. | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 82. | தொல்பழங்கால பாறை ஓவியம் | நாயனூர், திருக்கோயிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் | பாறை ஓவியம் | 2500 ஆண்டுகட்கு முற்பட்டது | செங்காவி வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ள இந்த ஓவியத்தில் பெரிய ஆடு ஒன்றின் உருவம் காணப் படுகிறது. இம்மலைப்பகுதியில் வாழ்ந்த குறும்பர் கள் என்ற இனத்தவர் 'வரையாடு' என்று அழைக்கப் படும் மலை ஆடுகளை வளர்த்து வந்தனர் என்று தெரிகிறது. இவ்வோவியத்தில் காணப்படும் ஆடு வரையாடு இனத்தைச் சார்ந்ததாக இருக்கலாம். | 9-5-94 |
| 83. | பொம்மைகள் | திருக்கோயிலூர் நகரில் அகழாராய்ச்சியில், விழுப்புரம் மாவட்டம் | சுடுமண்ணால் செய்யப்பட்ட பொம்மைகள், பானை ஓடுகள் | கி.மு. 1 முதல் கி.பி. 2 வரை | விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூரில் வீரட் டேஸ்வரர் கோயில் திரவுபதி அம்மன் கோயில், ஜீயர் மடாலயத்தோட்டம், சண்முகம் செட்டியார் தோட்டம் ஆகிய இடங்களில் இத்துறையினர் அகழாய்வில் ஈடுபட்ட போது கருப்பு சிவப்புப் பானையோடுகள், ரௌலட்டட் வகை ஓடுகள் போன்ற பல அரிய தொல்பொருட்கள் கிடைத் துள்ளன. | 15-3-94 |
| 84. | தூண் கல்வெட்டு | கொற்கை, திருச்செந்தூர் தூத்துக்குடி மெயின் ரோட்டின் ஓரம், தூத்துக்குடி மாவட்டம் | கல்தூண் | கி.பி. 14ஆம் நூற்றாண்டு | கல்வெட்டின் பெரும்பகுதி மழையாலும், வெயி லாலும் தேய்ந்து அழிந்துள்ளன. இந்தக் கல் வெட்டில் சடையவர்ம ஸ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டு 20-ஆவது சூரன்குடி நாட்டுப் பட்டின மருதூர் ஆள உடைய பிள்ளையாருக்கு நகரத்தார் செய்த தானங்கள் என்றும்; வேளாண் சங்கனார் என்ற ஒருவரைப் பற்றிய குறிப்பும்; அதில் அவருக்கு வாரிசு இல்லாமல் போனது பற்றியும்; வலங்கை மீகாமிப் படை (மாலுமியின் படை) என்ற கப்பல் படை பற்றியும், வீரக்கொடியார் பற்றியும் (வணிகர் களுக்கு பாதுகாப்புப் படை), எறிவீரப்பட்டினம் பற்றியும் கூறப்பட்டுள்ளது. | 15-6-94 |
| 85. | நடுகல் | பெண்ணாகரத்திலிருந்து ஒகேனக்கல் செல்லும் சாலையில், தருமபுரி மாவட்டம் | கல் | கி.பி. 14ஆம் நூற்றாண்டு | வீரன் எதிரியைக் குறிபார்த்த வண்ணம் குறுவாளை வீசுகிறான். குதிரைக் காலடிப் பகுதியில் போர் வீரர்கள் சண்டையிடுவது போலவும் காட்டப் பட்டுள்ளது. இந்நடுகல்லில் எழுத்துக்கள் இல்லை. அருகில் உள்ள இரண்டு கற்பலகைகளில் கல் வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த அரிய கண்டுபிடிப்பால் கி.பி. 14ஆம் நூற்றாண்டு முதல் இன்றுவரை தொடர்ந்து இந்நெடுஞ்சாலை பயன் பாட்டில் இருந்து வந்துள்ளது என்பதை உறுதி செய்ய முடிகிறது | 22-7-95 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 86. | கல்வெட்டு | இஞ்சிமேடு, செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் | கல் | விக்கிரமசோழன், கி.பி. 12-ஆம் நூற்றாண்டு | கோயில் அழிபாடுகளுக்கிடையில் கிடைத்துள்ள இக்கல்வெட்டில் திருமணீச்சுரமுடையார் கோயில் என்பதும் இவ்வூர்ப் பெயர் இஞ்சிமேடு என்றே கல்வெட்டில் குறிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கவை. மலைக்கோயிலுக்குச் செல்லப் படியமைத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. | 14-12-94 |
| 87. | சிற்பங்கள் | கோயம்புத்தூர் | கல் | கி.பி. 7-ஆம் நூற்றாண்டு | இரண்டு அரிய சிற்பங்கள் கோவை அகழ்வைப்பகத்தில் புதிதாகச்சேர்க்கப்பட்டுள்ளன. லகுலீசர் மற்றும் பிராமி சிற்பங்களே அவை. இரண்டும் பாண்டியர் மரபினதாக உள்ளன. | 31-1-95 |
| 88. | சிற்பங்கள் | வெண்மந்தை, வந்தவாசி வட்டம், விழுப்புரம் மாவட்டம் | கல் | கி.பி. 940 | இக்கல்வெட்டு வெங்காலநாட்டுக் கருவூரைச் சேர்ந்த கருவூர் தலைமகன் கதுவரன் என்பான் வெண்குன்றக் கோட்டத்து வாதவூர் நாட்டு வெண்பழந்தை என்ற ஊரில் ஏரிப்பட்டி நிலம் கொடுத்து ஏரிவெட்டி, அதற்குத் தூம்பும் அமைத்ததைக் குறிப்பிடுகிறது. வெண்மந்தை என்ற ஊர் கல்வெட்டில் வெண்பழந்தை என்று குறிப்பிடப்படுகிறது. | தொல்லியல் செய்திமடல் கோவை-2 மடல்-3; 21-4-95 |
| 89. | கல்வெட்டு | திருச்சி, மலைக்கோட்டை | கல் | கி.பி. 14 - 15 ஆம் நூற்றாண்டு | மலைக்கோயிலின் வடக்குப் பக்க பாறையில் உள்ள இக்கல்வெட்டில் ஒரு முனிவர் நிலவறையினுள் இறங்கி தவமிருக்க எண்ணி தம் சீடர்களுக்குச் செய்தி கூறுவதாக உள்ளது. தாம் நிலவறைக்குச் சென்ற பின் ஒரு ஆண்டு கழித்தே நிலவறையைத் திறக்க வேண்டும் என்றும் தாம் சித்தியடைவதற்காகவே நிலவறையினுள் செல்வதாகவும், மண்ணும் பொன்னும் வேண்டித் தவம் மேற்கொள்ளவில்லை என்றும் குறிப்பிடுகின்றார். | தொல்லியல் செய்திமடல் கோவை-2 மடல்-3; 20-4-95 |
| 90. | சிற்பம் | வடுகப்பட்டி, மதுரை மாவட்டம் | கல் | 1000 ஆண்டுகட்கு முற்பட்டது | மகாவீரர் சிற்பத்தின் இடப்புறம் வட்டெழுத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இது தவிர இரண்டு கற்பலகைகளிலும் வட்டெழுத்துக் கல்வெட்டு இடம் பெற்றுள்ளது. இவை வடுகப்பட்டியைச் சேர்ந்த உதயசந்திரன் என்பவரது நிலத்தில் வெகுநாட்களாகக் கிடந்தது கண்டறியப்பட்டன. சிற்ப அமைதி மற்றும் கல்வெட்டு | 2-9-95 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | எழுத்தமைதியைக் கொண்டு இது கி. பி. 10-11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். இச்சிற்பம் நாலரை அடி உயரமும் ஒன்றரை அடி அகலமும் உள்ளது. இதிலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு மாலைக்குளம் என்ற ஊர் மீண்டும் சீரமைக்கப்பட்டு விளைநிலமாகக் கொண்டு வரப்பட்டதைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டிலிருந்து மானசித்த நல்லூரான மாலைக்குளம், சமண மதத்திற்குரிய ஒரு சிறப்பிடம் என்பதும், இங்கு திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்ற வணிகர் குழுவினர் வாழ்ந்தனர் என்பதும் தெரிய வருகிறது. இந்த வணிகர்க் குழுதங்களுக்கென்று தனியாக 'அத்தாணிகள்' என்ற பாதுகாப்புப் படையை வைத்திருந்திருக்கிறது. அத்தாணிகள் என்பது அத்திகோசம் என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கமாக இருக்கலாம். | |
| 91. | கல்வெட்டு | இராமேசுவரம், இராமநாதபுரம் மாவட்டம் | கல் | கி.பி. 12 ஆம் நூற்றாண்டு | புனிதத்தலமான இராமேசுவரத்தில் அகத்தியர் தீர்த்தம் என்ற குளம் உள்ளது. இந்தக் குளத்தின் முன் நீர் இறைப்புப் படிக்கல்லாகப் பயன்படுத்தப்பட்ட கல்தூண் ஒன்றில் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு தமிழ்க் கல்வெட்டு காணப்படுகிறது. இதில் ஆலயத்தில் விளக்கெரிப்பதற்கு அக்காலத்தில் தானம் வழங்கிய இருவர் பற்றிய அபூர்வத் தகவல்கள் தரப்படுகின்றன. சோபனத்துமாதன் பறிவல்லுவன், சிலைச்செட்டி என்ற இருவரும் ஆலய விளக்கு எரிப்பதற்கு வழங்கிய தானம் பற்றி இக்கல்வெட்டு விவரிக்கிறது. முத்தூற்றுக் கூற்றம் பகுதியைச் சேர்ந்தவன் சிலைச்செட்டி என்பதும் தெரிய வருகிறது. | 18-8-95 |
| 92 | சிற்பம் | ஈராளச்சேரி, காவேரிப்பாக்கம், அரக்கோணம் வட்டம், வேலூர் மாவட்டம் | பலகைக் கல் | 1000 ஆண்டுகட்கு முற்பட்டது | ஈராளச்சேரி என்ற ஊரிலும், அமராபுரம் என்ற ஊரிலும் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மகாவீரர் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஈராளச்சேரியில் குளத்துக் கரைத் தெருவில் 120 செ. மீ. நீளமும் 60 செ.மீ. அகலமும் உள்ள கற்பலகையில் புடைச் சிற்பமாக மகாவீரர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. மகாவீரர் இரு கைகளையும் மடித்து வைத்தவாறு | 11-11-95 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தியான நிலையில், ஆடைகள் ஏதுமின்றி பத்மபீடத்தில் அமர்ந்துள்ளார். இவரின் தலையைச் சுற்றி அரை வட்ட வடிவப் பிரபை அணி செய்கிறது. தலைக்கு மேல் முக்குடையும், அதன் இருபுறமும் கொடி அலங்காரங்களும், பின்புறம் சக்கரமும் உள்ளன. அமைதியான முகமும், விரிந்த மார்பும், வாளிப்பான உடலமைப்பும் இச்சிற்பத்துக்கு அழகு செய்கின்றன. இம்மகாவீரரின் தோளின் இருபுறமும் இரண்டு இயக்கர்கள் தலையில் மகுடத்துடன் காணப்படுகின்றனர். இவர்களின் பாதங்களின் கீழ் இருபுறங்களிலும் மகரங்கள், பீடத்தில் அடிப்பகுதியின் முன் பகுதியில் மூன்று சிம்மங்களும், பக்கவாட்டில் இரு புறமும் ஒவ்வொரு சிம்மமும் அமர்ந்த நிலையில் உள்ளன. இச்சிற்பம் 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. ஈராளச்சேரிக்கு 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அமராபுரம் என்னும் ஊரில் நடராஜ மந்திரி என்பவரின் நிலத்தில் மேலும் ஒரு மகாவீரர் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் முகப்பகுதி சிதைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மகாவீரர் இருகரங்களையும் மடிமீது வைத்து, ஆடைகள் ஏதுமின்றி, அமைதியான கோலத்தில் தியான நிலையில் அமர்ந்துள்ளார். இவருடைய இரண்டு தோளுக்கு மேலும் இரண்டு இயக்கர்கள் நின்ற நிலையில் உள்ளனர். இவர்களுடைய தலைப்பகுதியும் சிதைக்கப்பட்டுள்ளது. கலையழகு வாய்ந்த இச்சிற்பங்களை ஆர்க்காடு அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வந்து பொது மக்களின் பார்வைக்கு வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. | |
| 93. | அரசு முத்திரை | இராமேசுவரம், இராமநாதபுரம் மாவட்டம் | பனை ஓலை | கி.பி. 1818 தும்னி மரைக்காயர் குடும்பத்தினரிடமிருந்தது. | முத்திரைத்தாள் புழக்கத்திற்கு வருவதற்கு முன்பு நிலம் மற்றும் சொத்துக்களை வாங்குவோர் பனை ஓலையில் தயாரிக்கப்பட்ட அரசு முத்திரை சுவடிகளைப் பயன்படுத்தியுள்ளனர். 1818-ஆம் ஆண்டில் அரசாங்கக் கருவூலம் விற்பனை செய்த அரிய முத்திரை ஓலைச்சுவடிகளை ராமேசுவரத்தைச் சேர்ந்த தும்னிமரைக்காயர் தமிழகத்தொல்பொருளாய்வுத்துறையிடம் ஒப்படைத்துள்ளார். இந்த ஓலைச்சுவடியின் ஒருமுனையில் வட்ட வடிவிலான அரசு முத்திரையை அழுத்தமாகப் பதித்துள்ளனர். அந்த முத்திரையில் 'பொக்கிஷம்' என்று தமிழிலும் | 30-11-95 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | | | | | 'டிரசரி' என்று ஆங்கிலத்திலும் தெலுங்கு மற்றும் உருது மொழிகளிலும் உரிய வாசகங்கள் இடம் பெற்றுள்ளன. ஓலையின் மற்றொரு மூலையில் பனை ஓலையின் மதிப்பு, அதாவது விலை பற்றிய விவரம் முத்திரை வடிவில் அழுத்தமாகப் பதிக்கப் பட்டுள்ளது.<br><br>கிழக்கிந்தியக் கம்பெனியாரால் நிறுவகிக்கப்பெற்ற அரசாங்கக் கருவூலம் 1818ஆம் ஆண்டு முதல் 1825 ஆம் ஆண்டு வரை விற்பனை செய்துள்ள பல் வேறு முத்திரைச் சுவடிகளின் விலை4 அணா, 2அணா ஒரு அணா மதிப்பில் இருந்துள்ளன. நிலக்கிரயப் பத்திரம், கடைக் கிரயப்பத்திரம், கடன் பத்திரம் என ஆறு ஓலைச்சுவடிக் கட்டுகளில் ஒரு சில ஓலைகள் மட்டும் பழுதுபட்டுள்ளன. இந்த ஆவணங்களைத் தவிர பனை ஓலையில் எழுதப் பட்ட பிராமிசரி நோட்டு, ஒத்தி வாங்கிய பத்திரச் சீட்டு, கடை வாடகைச் சீட்டு, கிட்டங்கி பற்று வரவுச்சீட்டு ஆகியவற்றையும் தும்னி மரைக்காயர் தொல்பொருளாய்வுத் துறையிடம் அளித்துள்ளார். பனை ஓலைச்சுவடிகளின் ஒருமுனையில் துளையிட்டு, அவற்றைக் கயிற்றினால் மொத்தமாகக் கட்டிக் கயிற்றின் முனையில் அரசாங்க முத்திரை பதித்த வட்ட வடிவ வில்லை ஒன்றை இணைத்துள்ளனர். தாமிரத்தாலான வட்ட வடிவ வில்லையில் கிழக் கிந்தியக் கம்பெனியின் முத்திரையும் முத்திரை பதித்த ஆண்டாகிய 1744 என்ற எண்களும் காணப் படுகின்றன. | |
| 94. | புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடம் | சோழங்குணம், விழுப்புரம் மாவட்டம் | புதிய கற்காலக் கருவிகள் | கி.மு. 3000, 2000 | சோழங்குணம் என்னும் ஊரில் புதிய கற்கால மக்கள் வாழ்விடங்களில் புதிய கற்காலக் கருவிகள் சிலவும், குத்துக்கல் என்று கூறப்படும் வட்டமான கல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு கிடைத் துள்ள கோடரி, சுரண்டிகள், உளி போன்ற கருவி களைக் கொண்டு பார்த்தால் இப்பகுதியில் வாழ்ந்த புதிய கற்கால மக்கள் காய்கனிகளை உண்டும், வேளாண்மை செய்தும் வாழ்ந்திருக்கலாம் என்று கருத முடிகிறது. செஞ்சிப் பகுதியில் புதிய கற்கால வாழ்விடங்களைக் கண்டறிந்திருப்பது | 13-10-95 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | இதுவே முதல்முறையாகும். இதுகாறும் தமிழ் நாட்டின் வடபகுதிகளான சேலம், தருமபுரிப் பகுதிகளில் மட்டுமே புதிய கற்கால மக்களின் வாழ்விடங்கள் இருந்துள்ளன என்ற கருத்தை மாற்றும் வகையில் இப்புதிய கண்டுபிடிப்பு அமைந்துள்ளது. கி.மு. 3000-2000 ஆண்டுகளில் புதிய கற்கால மக்கள் சேலம், தருமபுரிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து செஞ்சிப் பகுதிக்கு ஒரு பிரிவினர் வந்து தங்கியிருக்கலாமென்று கருத இடமேற்படுகிறது. மேலும் மேற் கூறிய கருவிகள் அனைத்தும் வட்டமான குழிவுத் தரைப்பகுதியில் கிடைத்திருப்பதால் புதிய கற்கால மக்கள் வட்டமான குடிசைகளில் வாழ்ந்துள்ளனர் என்பதும் இதன்மூலம் உறுதியாகிறது. | |
| 95. | ஓவியங்கள் | குடுமியான் மலை, புதுக்கோட்டை மாவட்டம் | பாறை ஓவியம் | கி.மு. 1000 - 500 | குடுமியான்மலை மலையின் மேற்குப்புறத்தில் ஒரு இயற்கையான குகைத்தளம் உள்ளது. இங்கு கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து படுக்கைகள் காணப்படுகின்றன. இவை சமண முனிவர்கள் வாழ்ந்ததை நினைவூட்டுபவை. இந்தக் குகைத் தளத்தின் முகப்புப் பாறைச்சரிவில் பாறை ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. கருப்பு வண்ணத்தில் பெரிய அள்ளில் வரையப்பட்டுள்ள இவ்வோவியங்களில் இரண்டு வீரர்கள் போரிடுவது போன்று உருவங்களுள்ளன. இதுவரை தொல்லியலாரின் பார்வைக்கு எப்படியோ தப்பிவிட்ட இந்த ஓவியத்தின் காலம் கி.மு. 1000-500க்கு இடைப்பட்டதாக இருக்கலாம். கருப்பு வண்ணத்தில் தீட்டப்பெற்ற பாறை ஓவியங்கள் தமிழகத்தில் மிக அரிதாகவே காணப்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. பண்டைத் தமிழ் எழுத்துக் கல்வெட்டு ஒன்றும் இம்மலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். கல்வெட்டின் வாசகம் 'நாழன் கொ[ற்]றி தந்த பளீய்' என்றுள்ளது. நாழன் கொற்றி என்ற பெண், சமண முனிவருக்குக் கற்படுக்கை அமைத்துக் கொடுத்தாள் என்பது இக்கல்வெட்டின் பொருளாகும். புதிதாக அறியப்பட்டுள்ள கல்வெட்டும், ஓவியமும் குடுமியான் மலைப் பகுதியின் சமூக வரலாற்றை அறிந்து கொள்ளக் கிடைத்த சான்றுகளாகும். | 10-1-96 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 96. | பானையோடு | அழகன்குளம், இராமநாதபுரம் மாவட்டம் | கப்பல் உருவம் கொண்ட பானையோடு | கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரை | அழகன்குளம் அகழாய்வில் கிடைத்துள்ள பண்டைத் தமிழ் எழுத்துப் பொறித்த பானையோடுகளும், குறியீடுகள் கொண்ட பானையோடுகளும், பல விலை மதிப்பற்ற கற்களால் ஆன மணிகளும், சங்கு வளையல்களும்; புறா, மயில், மீன் உருவம் உட்பகுதியில் அச்சாக இடப்பெற்றுள்ள பானையோடுகளும், உருவம் பொறிக்கப்பெற்ற தாயக்கட்டை, குதிரை, காளை உருவங்களை மட்கலன்களில் பதிப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட சுடுமண் அச்சுகளும், முத்திரை பதிப்பிக்கப்பெற்ற வெள்ளி நாணயம், சங்கக்காலப் பாண்டியர், மற்றும் உரோமானியர் காசுகளும், ஓடம் உருவம் வரையப் பெற்றுள்ள பானை ஓடும், யானை செடியைத் தும்பிக்கையால் வளைத்துத் தின்பதாக வரையப் பெற்றுள்ள பானையோடும் அரியக்கண்டுபிடிப்புக்களாகும். அழகன் குளம் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களுள் கப்பல் உருவம் பொறிக்கப்பட்ட பானையோடும் ஒன்று ஆகும். கப்பல் உருவம் பொறிக்கப்பட்டுக் காணப்பெறும் பானையோடு இப்போது தான் முதன்முதலில் தமிழகத்தில் கிடைத்துள்ளது. ஆனால் இலங்கையில் பிராமிக் கல்வெட்டு ஒன்றின் இறுதியில் கப்பல் உருவம் முன்பே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அழகன் குளத்தில் கிடைத்துள்ள இப்பானையோடு ரௌலட்டட் எனப்படும் பானை ஓட்டின் வகையைச் சார்ந்தது. இவை கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி. பி. முதல் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்தன. இதன் மூலம் பண்டைத் தமிழரின் கடல் வழிப்பயணமும், பிற நாடுகளுக்குக் கப்பல் மூலம் அவர்கள் சென்று வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததும் உறுதிப்படுத்தப்படுகின்றன. | 24-2-96 |
| 97. | முருகன் சிற்பம் | அயன்புரம், பரசுராமலிங்கேசுவரர் கோயில், சென்னை, சென்னை மாவட்டம் | கல் | 1100 ஆண்டுகட்கு முற்பட்டது. பல்லவர் காலம் | சென்னை அயனாவரத்தில் உள்ள பரசுராமலிங்கேசுவரர் கோயிலில் 1100 ஆண்டுகட்டு முற்பட்ட பல்லவர் காலச் சிற்பம் உள்ளது. செவ்வகப் பீடத்தின் மீது நேராக நின்ற நிலையில், மேல் வலக்கரத்தில் அக்கமாலையையும் மேல் இடக்கரத்தில் கமண்டலத்தையும் ஏந்திய மாறுபட்ட நிலையில் | 6-4-96 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | வடிக்கப்பட்ட ஒன்பதாம் நூற்றாண்டுச் சிலை இது. பொதுவாகப் பிற்கால முருகன் சிலைகளில் வலக் கரத்தில் வச்சிரமும், இடக்கரத்தில் சக்தியும் காட்டப் படுவதே வழக்கம். கீழ் இரு கரங்களில் அபய வரத முத்திரைகள் காட்டப்பட்டிருக்கும். இச்சிற்பத்தில் அக்கமாலையும் கமண்டலமும் இருப்பது மிக அரிதான ஒன்றாம். வலக்கரம் அபயத்திலும், இடக்கரம் தொடை மீது வைத்த நிலையிலும் உள்ளன. தடித்த கண்ணிமாலையை நெற்றியில் சூடி, சன்னவீரத் தினைமார்பில் பூண்டு, காதிலும் பெரிய பத்ர குண்டலங்களை அணிந்து முருகன் காட்சியளிக்கிறார். இச்சிற்பத்தில் காணப்பெறும் ஆடை அணிகலன் களின் வடிவமைப்பு திருவொற்றியூர் மற்றும் மாமல்லபுரம் சிற்பங்களைப் போன்றது. சிற்பத்தின் முகம் மட்டும் பிற்காலத்தில் திருத்தம் செய்யப் பட்டுள்ளது. இச்சிற்பம் இடம் பெறும் கோயிலில் ஒரு கல்வெட்டு 'அம்முதடுவான் சுரைக்குடையாந் னான் நயினான்' என்று எழுதப்பட்டிருப்பதன் மூலம் இக் கோயிலில் நிவேதனத்துக்குரிய உணவினைச் சமைத்தவன் சுரைக்குடையான் நயினான் என்பது பெறப்படுகிறது. கருவறையின் நிலைக் காலில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டின் எழுத்தமைதி கி பி. 14-15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதி லிருந்து இக்கோயில் கி.பி. 14-15 ஆம் நூற்றாண் டிலிருந்தே இங்குள்ளது என்பது தெரிய வருகிறது. ஆனால் முருகன் சிற்பம் வேறு எங்கிருந்தோ கொண்டு வரப்பட்டு இங்கு வைக்கப்பெற்றுள்ளது. | |
| 98. | சிற்பம் | ஒட்டியம்பாக்கம், (சென்னையை அடுத்த மேடவாக்கத்தின் அருகே) காஞ்சிபுரம் மாவட்டம் | கல் | கி.பி. 11-ஆம் நூற்றாண்டு | சென்னையை அடுத்த மேடவாக்கத்தின் அருகே ஒட்டியம்பாக்கம் என்ற ஊரில் மேற்கொண்ட தொல்லியல் பரப்பாய்வின்போது இந்தச் சிற்பம் கிடைத்துள்ளது. கணுக்கால் வரை நீண்ட ஆடை யணிந்து இருகரங்களுடன் தோற்றமளிக்கும் புத்தர் சிற்பம், பத்ரபீடத்தின் மீது நேராக நின்ற நிலை யில் வடிக்கப்பட்டுள்ளது. நெற்றியும் முகமும் சிதைந்துள்ளன. பிரபையினின்றும் வெளிவரும் வகையில் காட்டப்பட்டுள்ள கொடிகள் சுருள் சுருளாக வளைந்து புத்தபிரான் பாதம் வரை இருமருங் கிலும் செல்கின்றனவாய் வடிவமைக்கப்பட்டுள்ளது. | 19-5-96 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 99. | ஏரிக்கரைக் கல்வெட்டு | தேவிமங்கலம் அக்கரைப்பட்டி, லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம் | கல் | கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டு | அஞ்சாதபெருமாள் ஏரிக்கரை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு ஒன்று, அவ்வேரிக் கரையருகே உள்ள பாறையில் உள்ளது. மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் கீழ் ஆட்சி புரிந்த குலோத்துங்கச் சோழ வாணவதரையர் என்ற குறுநில மன்னன் இந்த ஏரியை வெட்டியுள்ளான். காலப்போக்கில் கரை உடைந்ததால் இவ்வுடைப்பைக் கடும்பளவன் தியாக வினோதவேளான் என்பவன் சரிசெய்து கரையை உயர்த்தி "அஞ்சாத பெருமாள் ஏரிக்கரை" எனப் பெயரிட்டுள்ளான். | 21-10-96 |
| 100. | சிற்பங்கள் | செம்மார், திருக்கோயிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் | கல் | கி.பி. 7-ஆம் நூற்றாண்டு | கோயிற்சுவரில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த துர்க்கை, சேட்டை ஆகிய சிற்பங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பொதுவாகச் சேட்டை சிற்பங்களில் இல்லாத கமண்டலமும் அடியவரின் உருவமும் புதி தாக இச்சிற்பத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது | 2-11-96 |
| 101. | கிணறு | திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை | கிணறுஉறை | கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டு | மதுரை திருமலைநாயக்கர் அரண்மனையில் பழுது பார்க்கும் பணி நடைபெற்றபோது பழங்கால உறை கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அரண்மனை சிம்மாசனம் அமைந்துள்ள பகுதிக்கு நேர்மேற்குப் புற மாகப் பின்புறப் பகுதியில் அவ்வுறைகிணறு மூடிக் கிடந்தது தெரியவந்தது. இக்கிணறு 5 அடி ஆழமும் $2\frac{1}{2}$ அடிவிட்டமும் கொண்டதாக இருக்கிறது. கிணற் றுக்குள் சுட்ட மண்ணால் செய்யப்பட்ட 7 உறைகள் ஒன்றின் மேல் ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன. | 25-12-96 |
| 102. | கல்வெட்டு | தாமரைக்கரை, ஈரோடு மாவட்டம் | கல் | கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டு | இக்கல்லில் மூன்று வரிகளை உடைய சிறிய கல் வெட்டு உள்ளது. தாமரைக் கரையிலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ள ஈரெட்டி மலை என்ற இடத்தில் முன்பு கண்ட இது போன்ற ஒரு கல்வெட்டு அறியப்பட்டிருக்கிறது. இப்பகுதியில் மேலும் சில கன்னட மொழி நடுகற்களும், தமிழ்ப் பாறைக் கல் வெட்டுகளும் காணப்படுகின்றன. | 27-7-97 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 103. | நடுகல்சிற்பம் | குத்தாலம், மயிலாடுதுறைவட்டம், நாகை மாவட்டம் | கல் | 1000 ஆண்டுகட்கு முற்பட்டது. | குத்தாலம் உத்திர கீழ வீதியில் ஆயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட சோழர் காலக் கலையழகுடன் கூடிய நடுகல் சிற்பம் ஒன்று கல்வெட்டுடன் இருப்பது கண்டறியப்பட்டது. இச்சிற்பம் 4 அடி உயரமும் 1 அடி அகலமும் உள்ள தனிப்பலகைக் கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. வீரன் நின்ற நிலையில் தன் தலையில் கொண்டையை இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையில் உள்ள வாளால் தலையை அரியும் நிலையில் உள்ளது. கழுத்தில் மாலையும் இடுப்பில் கட்டிய ஆடை தொடை வரை நீண்டும் உள்ளது. இடுப்பில் குறுவாள், காணப் படுகிறது. கால்களில் கழல் அணிந்துள்ளான். | 29-5-97 |
| 104. | புத்தர் சிலை | சின்னமேடு பூம்புகார் அருகில், நாகை மாவட்டம் | (பால் நாடு) கல் | கி.பி. 1-2 ஆம் நூற்றாண்டு | இரண்டு கரங்களுடன் நின்ற கோலத்தில் காணப் படும் இச்சிலையில் வலக்கரம் தோளுக்குக் கீழே உடைந்துள்ளது. இடக்கரம் ஆடையால் மூடப் பட்டுள்ளது. புத்தருடைய உடலை இவ்வாடை கழுத்துக்குக் கீழிருந்து கணுக்கால் வரை அழகு செய்கிறது. சிலையின் பின்புறம் ஆடை மெல்லிய தாகக் காட்டப்பட்டுள்ளது. சிலையின் பெரும் பகுதி சிப்பிகளால் துளையிடப்பட்டுக் காணப்படுறது. புத்தருடைய நீண்டு தொங்கும் காதுகளுள் வலக் காது முழுமையாகவும், இடக் காது உடைந்தும் உள்ளன. ஆந்திராவின் பால்நாடு கல்லினால் செய்யப்பட்ட இந்த புத்தர் சிலை தமிழகத்தில் கடலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட முதலாவ தாகும். கி. பி. 1-2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. | 21-8-97 |
| 105. | எழுகன்னியர் சிற்பங்கள் | கோவிலடி | கல் | கி. பி. 8-ஆம் நூற்றாண்டு | கி.பி. 8-ஆம் நூற்றாண்டுப் பல்லவர் காலத்தைச் சார்ந்த கன்னியர் எழுவர் சிற்பங்களும், முற்கால சோழர் காலக் கன்னியர் எழுவர் சிற்பங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. பல்லவர் காலத்துச் சிற்பங்கள் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்தைச் சார்ந்த சிற்பங்களில் நான்கு கன்னியர் மட்டுமே உள்ளனர். | 18-9-97 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 106. | நுண்கற்காலக் கருவிகள் | சுக்குப்பாறை தேரிவிளை, அகஸ்தீஸ்வரம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம் | கல் | கி. மு. 4000 | கி.மு.4000ஆவது ஆண்டைச் சார்ந்த கற்கால மனிதர்களால் பயன்படுத்தப்பட்ட இக்கருவிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டாவது முறையாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை அகேட், குவார்ட்ஸ் போன்ற மூலக் கற்களால் ஆனவை. நுண்கற்கால எச்சங்களைத் தவிரப் பிற்காலத்தின் வாழ்விடங்கள் இருந்ததற்கான தடயமும், பிற்காலப் பானையோடுகளும், உடைந்த சுடுமண் அகல்விளக்கு ஒன்றும் இப்பகுதியில் கிடைத்துள்ளன. | 25-9-97 |
| 107. | அய்யனார் சிற்பம் | ஆலக்கிராமம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் | கல் | கி. பி. 7-ஆம் நூற்றாண்டு | ஒரு பீடத்தின் மீதுள்ள இச்சிலை இடது காலைப் பீடத்தின் முன்புறமாகத் தொங்கவிட்டவாறும், வலது காலைப் பீடத்தின் மீது மடக்கிக் குத்திட்டவாறும் காணப்படுகிறது. இருகரங்களுடைய இச்சிற்பம் தனது வலக்கரத்தை வலக்காலின் மூட்டின் மீது லோல ஹஸ்தமாகவும், இடக்கரத்தை ஊரு ஹஸ்தமாகத் தொடை மீது வைத்தும் உள்ளது. இடது காது தோள்பட்டை வரை தொங்கியவாறும் கனமான குண்டலம் அணிந்தவாறும் அமைக்கப் பட்டுள்ளது. தலைக்கு மேலே இரு சாமரங்களும், அதற்கு மேலே ஒரு குடையும் உள்ளன. அய்யனாரின் இடப்புறம் ஓர் அழகிய பெண் வலக் கரத்தில் கலசத்தைத் தாங்கியும், இடக்கரத்தை இடுப்பில் வைத்தும் நின்றுகொண்டு இருக்கிறாள். இப்பெண் அய்யனாரின் தேவியருள் ஒருவராகிய பூரணையாகவோ அல்லது தாருகாவனத்து முனிவர்களை மயக்குவதற்குத் திருமால் அவதாரம் எடுத்த மோகினியாகவோ இருக்கலாம். அய்யனார் உருவோடு குதிரைவீரன், குரங்குகள், நாய், சேவல், குள்ள ஆண் உருவம் ஆகியவை ஒருசேரச்செதுக்கப்பட்டுக் காணப் படுவது இதுவே முதன்முறை. கி பி. 7-ஆம் நூற்றாண்டு முதலே அய்யனார் வழிபாடு தமிழகத்தில் சிறந்திருக்கிறது என்பதற்குச் சான்றாக இச்சிற்பத்தைக் கூறலாம். | |
| 108. | அய்யனார் | ஆலக்கிராமம், திண்டிவனம் வட்டம் | கல் | கி. பி. 7-8 ஆம் நூற்றாண்டு | ஒரு காலை மடித்து வைத்தும், ஒரு காலைக் குத்திட்டு வைத்தும், குத்திட்ட வலக்காலின் மீது வலக்கையைத் தொங்கவிட்ட நிலையில், நீண்ட மடிந்த காதுகள் தோள்வரை தொங்க, தலையில் சடாபாரம் அணி | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | செய்ய, உதரபந்தமும், இடைக்கச்சையும் அணிந்து காணப்படுகிறார். கைகளில் கேயூரமும், காப்புகளும் காணப்படுகின்றன. இருபுறமும் இரு பெண்கள். வலப்புறம் உள்ளவர் இடக்கரத்தில் மலர் ஏந்தியும், இடப்புறம் உள்ளவர் பெரிய பாத்திரம் போன்ற ஒன்றை வலக்கையில் சுமந்தும் உள்ளனர். அய்யனாருடைய காலின் கீழ்நாயும், குதிரையைப் பிடித்து நிற்கும் வீரனின் உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. | |
| 109. | அரிய பொருட்கள் | அழகன்குளம், இராமநாதபுரம் மாவட்டம் | செப்புக்காசு, எடைக்கல், கல்மணிகள், பானையோடுகள் | கி.மு. 4-ஆம் நூற்றாண்டு முதல் கி பி 3-ஆம் நூற்றாண்டு முடிய | யானையின் உருவம் ஒரு புறமும் மீன் சின்னம் மறுபுறமும் பொறிக்கப்பட்ட சதுரச் செப்புக்காசு கிடைத்துள்ளது. இது கி மு. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் காசாகும். இக்காசு தவிர ஒரு வகை மென்கல்லால் ஆன எடைக்கல்; பல வடிவங்களில் அமைந்த கல்மணிகள், சங்கு வளையல் துண்டுகள், பண்டைத் தமிழ் எழுத்துகள் பொறித்த கருப்பு சிவப்பு வண்ணப் பானையோடுகள் ஆகியனவும் கிடைத்துள்ளன. எழுத்துப் பொறிக்கப்பெற்ற பானையோடுகளுள் ''தானிய் துவரைமா[ன்]'' என்று பொறிக்கப்பட்ட ஓடு குறிப்பிடத்தக்கது. இதன் பொருள் தனித்தன்மை வாய்ந்த அல்லது சிறப்பு வாய்ந்த துவரைமான் என்பதாகும். இவை தவிர செங்கல்லால் ஆன நீர்வடிகால் ஒன்றும் கண்டறியப் பட்டுள்ளது. | 27-2-98 |
| 110. | அரியபொருட்கள் | கொடுமணல், ஈரோடு மாவட்டம் | பானையோடுகள் குடிநீர்க் கால்வாய் | கி மு. 2-ஆம் நூற்றாண்டு | இங்கு கிடைத்துள்ள பானையோடுகளில் உள்ள எழுத்துகளின் வரிவடிவம் ஆந்திரமாநிலம் பட்டிப் புரோலுவில் கிடைத்த கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வரிவடிவத்தை ஒத்துள்ளது. . தவிர சுடுமண்ணால் அமைக்கப் பெற்ற குடிநீர்க் குழாய்களும் வெளிப்படுத்தப்பட்டன. | 27-2-98 |
| 111. | பொம்மைகள் | பூம்புகார், நாகை மாவட்டம் | சுடுமண் உருவங்கள் | பல்லவர் - சோழர் இடைமாறுபாட்டுக் காலம் | இங்கு கிடைத்துள்ள சுடுமண் பொருட்களுள் ஓர் ஆண் உருவத்தின் தலைப்பகுதி தனிச்சிறப்புடையது முற்காலச் சோழர்கலைப் பாணியில் வடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் காளை, யாளி ஆகிய சுடுமண் உருவங்களும் கிடைத்துள்ளன. | 27-2-98 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 112. | அரிய பொருட்கள் | அழகன்குளம், இராமநாதபுரம் மாவட்டம் | பெண் உருவங்கள் பதிக்கப்பெற்ற பானையோடுகள், மற்றும் கப்பல் உருவம் வரையப் பெற்ற பானையோடு | கி.மு. 2-1 ஆம் நூற்றாண்டு | அழகிய உருவங்களுடன் கூடிய பானையோடு கிடைத்துள்ளது. அதில் இரு பெண்கள் வலப்பக்கம் திரும்பிய நிலையில் வடிக்கப்பட்டுள்ளனர். ஒரு பெண் இடக்கரத்தில் நீண்ட கழுத்துடைய சாடியை ஏந்திய வண்ணமும், மற்றொரு பெண் தன் இடக்கரத்தில் விசிறி (அ) இசைக் கருவியைப் பிடித்த வாறும் காணப்பெறுகின்றனர். இவர்களையடுத்து மற்றொரு பெண்ணும் இதே போன்று விசிறி அல்லது இசைக்கருவியைப் பிடித்துள்ளாள் போன்று தெரிகிறது. இவ்வுருவங்களைச் சுற்றிலும் சிறுசிறு குமிழமைப்புகள் காணப்படுகின்றன. ஆடையமைப்பு, உருவங்களின் அமைதி இவையாவும் ஆப்பிரிக்க நாட்டைச் சார்ந்த உருவங்கள் என்பதைப் புலப்படுத்துகின்றன. இங்கு கிடைத்துள்ள மற்றொரு பானையோட்டில் ஆழமாகப் பொறிக்கப்பட்டுள்ள பாய்மரத்துடன் கூடிய கப்பல் உருவம் குறிப்பிடத் தக்கது. பாய்மரத்துணியில் பல்வேறு அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உச்சியில் கொடியொன்று பறக்கின்றது. படகின் துடுப்புகள் இடப்புற ஓரத்தில் வைக்கப்பட்டுள்ளன. இது கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததெனலாம். | 5-4-89 |
| 113. | அரிய பொருட்கள் | கொடுமணல் ஈரோடு மாவட்டம் | பானையோடுகள், இரும்பு வாள், கிண்ணங்கள், சாடிகள், கல்மணிகள் | ... | கொடுமணலில் வாழ்விடப் பகுதியில் பானையோடுகள் கீறல் உருவங்களுடனும், தமிழ் எழுத்துப் பொறிப்புகளுடனும் கிடைத்துள்ளன. புதைகுழிகளில் இரும்பாலான பெரிய வாள்களும், கருப்பு சிவப்பு வண்ண வகையிலான கிண்ணங்களும், சாடிகளும் கிடைத்துள்ளன. இது வரை 5 பெரிய வாள்கள் கண்டறியப்பட்டுள்ளன மற்றொரு ஈமக் குழியில் ஏர்க்கொழு ஒன்றும், நான்கு அங்கவடிகளும் (Stirrup) கிடைத்துள்ளன. முதன்முறையாக இவ்வகழாய்வில் கிடைத்துள்ள வடஇந்திய இரண்டு வழவழப்பான பானை யோடுகள் மௌரியர்களுடன் தமிழ் நாட்டுக்கு இருந்த வணிகத் தொடர்பை உறுதி செய்கின்றன. பெருங்கற்கால மட்கலம் ஒன்றின் மூடியில் புறா உருவம் வடிக்கப்பட்டுள்ளது. எட்டு வகையான கல்மணிகளும் ஈமக்குழியிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. | 5-4-98 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 114. | அரிய பொருட்கள் | பூம்புகார், நாகை மாவட்டம் | பானையோடு | கி.மு. 3-2 ஆம் நூற்றாண்டு | [அ] ஹாபாகேதரோ என்று அசோகன் பிராமியில் எழுதப்பட்ட பானையோடு முதன்முறையாக இங்கு அகழாய்வில் கிடைத்துள்ளது அரிய கண்டுபிடிப்பாகும். இக்கண்டுபிடிப்பின் மூலம் அசோகன் தமிழகத்தில் புத்தமதத்தைப் பரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறான் என்பது ஊகிக்க முடிகிறது. | 5-4-98 |
| 115. | சிற்பங்கள் | குரும்பூண்டி, கந்தர்வ கோட்டை வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் | கல் | கி.பி. 7,8,9-ஆம் நூற்றாண்டு | முத்தரையர் காலச் சமணச் சிற்பம் ஒன்றும், விநாயகர் சிற்பம் ஒன்றும் கண்டறியப்பட்டது. அபிநந்தர் என்னும் நான்காம் சமணத் தீர்த்தங்கரர் உருவம் அர்த்தபரியங்க ஆசனத்தில் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறது. முக்குடையும், பிரியாலா மரமும் தலைக்குமேல் காணப்பட, உருவத்தின் இருபுறமும் இயக்கர் இருவர் நின்று சாமரம் வீசும் நிலையிலும், பீடத்தின் கீழ் மலரேந்திய பெண்ணும், குரங்குகளின் உருவங்களும் வடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் அபிநந்தர் சிற்பம் அரிதாகவே கிடைத்துள்ளது. சிற்ப அமைதி கொண்டு இதனை கி.பி. 8-9ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததெனலாம். இவ்வூர்க்குளக்கரையில் கி.பி. 7,8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முத்தரையர்கால விநாயகர் சிற்பம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. | 14-5-98 |
| 116. | சிற்பம் | பழமாநேர், திருக்காட்டுப்பள்ளி, தஞ்சை மாவட்டம் | கல் | 400 ஆண்டுகளுக்கு முற்பட்டது | இவ்வூர் வேணுகோபாலசாமி கோயிலின் மேற்கே வயலில் செங்கல் அறுக்க பூமியைத் தோண்டியபோது திருமால் சிற்பம் கிடைத்தது. நான்கடி உயரமும் இரண்டடி அகலமும் கொண்ட இச்சிற்பம் விஜய நகர அரசர் காலக் கலைப்பாணியில் அமைந்துள்ளது. | 29-10-97 |
| 117. | நடுகல் | மாதனூர், வாணியம்பாடி வட்டம், வேலூர் மாவட்டம் | கல் | கி.பி. 1060 | மாதனூரின் மலையடிவாரத்தில் நான்கு நடுகல் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு கல்வெட்டு, பரகேசரிவர்மன் விசயராசேந்திர தேவனின் ஒன்பதாம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. சயங்கொண்ட சோழ மண்டலத்துப் பெரும்பாணப்பாடி கீழடையாறு நாட்டுத் தொப்பாலாத்துத் திருக்குமரடதையான உத்தமநிதி ஆனசித்திரமேழிப்பெரிய | 3-5-98 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்டு அய்யன் என்பான் தனது ஊர் ஆநிரைகளைப் பிறர் கவர்ந்து சென்ற போது போரிட்டு அவற்றை மீட்டுப் பட்டான். இக்கல்வெட்டின் இடையில் 'உத்தமநிதி அபையம்' என்று வரிக்கு மேலும் கீழும் கோடிட்டு எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அடுத்த மூன்று நடுகற்கள் பார்த்திப சேகரவர்மனின் 4,6,16-ஆவது ஆட்சியாண்டுகளைச் சார்ந்தவை. இவன் சோழ மன்னன் சுந்தரசோழனின் காலத்தில் தொண்டை மண்டலத்தில் கி.பி. 959 முதல் 979 வரை ஆட்சி புரிந்தவன். தொறு மீட்டுப்பட்டு இறந்தவனுக்கும், தம் தலைவன் போரில் வெற்றி பெற வேண்டும் என்று நோன்பிருந்து உயிர் துறந்தவனுக்குமாக எடுப்பிக்கப் பெற்ற நடுகற்களாகும். | |
| 118. | காசுகள் | வாலாந்தரவை, இராமநாதபுரம் மாவட்டம் | செப்பு | 700 ஆண்டுகளுக்கு முற்பட்டவை | 17 செப்புக்காசுகள் ஒழுங்கற்ற வடிவில் உள்ளன. காசுகளின் ஒரு பக்கம் மீன் உருவத்துடன் 'சுந்தர பாண்டியன்' என்று தமிழில் எழுதப்பட்டும், மறு பக்கத்தில் சூரியன், சந்திரன் ஆகியவற்றுடன் வராகச் சின்னம் பொறித்தும் காணப்படுகின்றன. கி. பி. 13 - ஆம் நூற்றாண்டெழுத்தமைதியில் உள்ளது. | 18-6-98 |
| 119. | பொம்மைகள் | பல்லவனீசுவரம், வானகிரி, சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் | சுடுமண் | கி.பி. 3-ஆம் நூற்றாண்டு | பல்லவனீசுவரப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் பொம்மை இடுப்புக்குக் கீழே உடைந்துள்ளது. தலையில் சுருள்முடிகள் உள்ளன. காதுகளில் பத்ரகுண்டலம், மார்பில் ஆரம் உள்ளன. மற்றொரு சுடுமண் பொம்மை காவிரிக்குத் தென்கரையிலுள்ள வானகிரி எனும் ஊரில் சேகரிக்கப்பட்டது. தலைமுடி கொண்டையாகக் கட்டப்பட்டு நெற்றிக்கு மேல் மாலை சுற்றப்பட்டுள்ள இதன் காதுகளில் பத்ரகுண்டலமும் மார்பிலும் கழுத்திலும் ஆரங்களும் உள்ளன. இவ்விரண்டும் ஆண் உருவங்களாக இருக்கலாம். இதன் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு. | 4-8-98 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 120 | சிற்பத்தொடர் | ஏகாம்பரநாதர் கோயில், காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் | கல் | விஜயநகர அரசர் காலம் | சிறுத்தொண்டர் கதை முழுமையாகச் செதுக்கப் பட்டுள்ள விஜயநகர அரசர் காலச் சிற்பத்தொடர் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் திருக் குளத்தின் மேற்குக் கரையில் உள்ள மண்டபத்தின் அதிட்டானப் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. சைவப்பெரியார்களுடைய கதைகளில் ஒரு குறிப் பிட்ட பகுதி மட்டுமே சிற்பத்தொடர்களாகத் தமிழகத்தில் சில கோயில்களில் செதுக்கப்பட் டிருக்கும். தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் சிறுத்தொண்டர் கதைச் சிற்பத்தொடர் அவர் கதையின் முழுப்பகுதியையுமே விரிவாக, விளக்க மாகக் கதை கூறுமாறு போலச் செதுக்கி அமைத் திருப்பது இக்கோயிலில் மட்டுமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. | கல்வெட்டு காலாண்டு இதழ்-49 1997 சனவரித் திங்கள் |
| 121 | சிற்பம் | கிளியனூர், விழுப்புரம் மாவட்டம் | கல் | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு | கிளியனூரில் உள்ள அய்யனார் கோயில், முத்து மண்டபத்து அய்யனார் கோயில் என்றழைக்கப் படுகிறது. இக்கோயிற் கருவறையில் உள்ள அய்யனார் சிற்பம், உயர்ந்த பீடத்தின் மீது வலது காலை மடித்து இடது காலைப் பீடத்தின் முன் தொங்க விட்ட நிலையில் அமர்ந்திருக்கிறது. வலக்கை, தோளின் முன்புறம் சாய்ந்த நிலையில் கடகமுத்திரையில் அமையத் தோளின் பின்புறம் நீண்டு வளைந்த செண்டு போன்ற உருவம் காணப் படுகிறது. இடக்கை, இடது முழங்கால் மீது அமையும் வகையில் தாழ்கரமாக உள்ளது. அய்ய னாரின் தலையை அழகிய மகுடம் அலங்கரிக்கிறது. அய்யனாரின் வலது இடது தோள்களுக்கு பக்கப் பகுதியில் இரு பெண் உருவங்கள் நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளன. இவை அய்யனாரின் இரு தேவியரான பூரணை புஷ்கலையாக இருக்கலாம். அய்யனார் காலின்கீழ் வலப்புறம் குதிரை ஒன்றினை இடக்கையால் பற்றிய நிலையில் வீரன் ஒருவன் காட்டப்பட்டுள்ளான். இடப்புறம் மற்றொரு வீரன் இடது கையைத் தரையில் ஊன்றி வலக்கையை முன்னே நீட்டியவாறு குத்திட்டு அமர்ந்துள்ளான். இவ்வழகிய உருவம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சார்ந்ததாகக் கருதலாம். | 16-8-98 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 122. | தகடுகள் | பேரூருக்கு அருகில், கோயம்புத்தூர் மாவட்டம | களிமண் மற்றும் செப்புத் தகடுகள் | 2000 ஆண்டுகட்கு முற்பட்டவை | 2000 ஆண்டுகட்கு முற்பட்ட பண்டைத்தமிழ் எழுத்துகளும், அசோகன் பிராமி எழுத்துகளும் கலந்து எழுதப்பட்ட களிமண் தகடுகள்; பீடம் மற்றும் தலைப்பகுதிகளில் எழுதப்பெற்ற சுடுமண் பொம்மைகள் ஆகியன பேரூர் என்ற ஊருக்குப் பக்கத்தில் வீடுகள் கட்டுவதற்காக நிலம் அகழ்ந்தபொழுது கிடைக்கப் பெற்றதாக போளுவாம்பட்டி புலவர் திரு ஐ. இராமசாமி அவர்கள், தெரிவித்த தகவலின் படி அவை ஆய்வு செய்யப்பட்டன. தகடுகள் மூன்றும் சுடுமண் பொம்மைகள் 20க்குக் குறையாமலும் உள்ளன. இவற்றோடு செப்புத்தகடு ஒன்றில் ஓர் ஆண் உருவமும், அவரது பெயரான 'காடன்' என்ற பண்டைத் தமிழ் எழுத்துப் பொறிப்பும் உள்ளன. இவை நேர்த்திக் கடனுக்காக ஒரு கோயிலுக்கு வழங்கப் பெற்றிருக்கலாம். இத்தகைய நேர்த்திக் கடன் அளிக்கும் மரபு வடநாட்டில் மிகுதியாக இருந்துள்ளது. தற்பொழுது நிகழ்ந்துள்ள இக்கண்டு பிடிப்பால் இத்தகைய தகடுகள் தமிழகத்திலும் நேர்த்தி கடனாக வழங்கப் பெற்றிருந்தன என்பதை அறிகிறோம். எனவே இககண்டுபிடிப்பு மிக முக்கியத்துவம் பெறுகிறது. | 13-6-98 |
| 123 | சிற்பங்கள் | வடக்குப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம் | கல் | கி.பி. 8, 9, 10-ஆம் நூற்றாண்டு | வடக்குப்பட்டு மடுவங்கரை மேட்டில் ஒரு விஷ்ணுவின் சிற்பம் அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றது. இதன் காலம் கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டெனலாம். நத்தமேட்டுப் பகுதியில் உள்ள மற்றொரு விஷ்ணுவின் நின்ற கோலச் சிற்பம் கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தது. இதன் தலைப்பகுதி காணப்பெறவில்லை. பெரிய செல்லியம்மன் கோயிலில் உள்ள சப்தமாதர், வீரபத்திரர், விநாயகர் சிலைகள் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. மிக்க வனப்புடையவை. இவை தவிர சிதைந்த சிற்பங்கள் மற்றும் சுமார் நான்கு அடி நீளமுள்ள இலிங்கம் ஆகியவை இம்மேட்டுப்பகுதியில் சிதறிக்கிடக்கின்றன. எனவே இப்பகுதியில் ஒரு சிவன் கோயிலும், பெருமாள் கோயிலும் இருந்து அழிந்திருத்தல் வேண்டும் என ஊகிக்கலாம். | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 124. | கல்வெட்டு | பட்டலூர், ஈரோடு மாவட்டம் | கல் | கி. பி. 10-ஆம | பட்டிலூர், என்றும பட்டில் என்றும் கூறப்பட்ட இவ்வூரின் ஆளும் குழுவும் அதிகாரிகளும் சம்மதித்து இவ்வூரிலுள்ள திருமால் கோயிலுக்கு ஒரு குறிப்பிட்ட நிலத்தை (தறை) ஏக போகமாகக் கொடுத்துள்ளனர். திருமாலின் பெயர் அழகப் பெருமாள் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த நான்கு எல்லைக்குள் கொடுக்கப்பட்ட தறையைச் செழிப்பாக்குபவர்கள் பாதம் தலைமீது வைத்துக் கொண்டாடப்படும் என்றும் இந்த தர்மத்தை அழிப்பவர்கள் ஏழு தலைமுறைக்குக் குழந்தை இல்லாது போவார்கள். அதாவது ஏழு தலைமுறைக்கு வாரிசாகத் தத்து எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. | 29-8-98 |
| 125. | சிற்பங்கள் | அரசூர் விழுப்புரம் மாவட்டம் | கல் | கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டு | புடைச் சிற்பமாக உள்ள அய்யனார் சிற்பத்தில் யானை, குதிரை, நாய் ஆகிய உருவங்களும் காணப் பெறுவது சிறப்புடையது. இச்சிற்பத்தின் இரு பக்கங்களிலும் பணியாளர் உருவங்கள் வடிக்கப் பட்டுள்ளன. இடப்பக்கமுள்ள பெண் உருவம் கத்தி போன்ற ஒன்றை ஏந்தியும், வலப்பக்கம் உள்ள ஆண் உருவம் குடையினை ஏந்தியும் காணப்படுகின்றன. அய்யனார் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பது போன்று காட்டப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். பீடத்தின் இரு பக்கங்களிலும் பின்னங்கால்களைக் குத்திட்டுத் தூக்கிப்பாயும் நிலையில் இரண்டு யாளிகள் வடிக்கப்பட்டிருப்பது மற்றொரு சிறப்பாகும். பீடத்தின் முன் கால்களை மடக்கிப்படுத்த நிலையில் நாய் காணப்படுகிறது. மேல்பகுதியில் வலப்பக்கம் யானையும் இடப்பக்கம் குதிரையும் காட்டப்பட்டுள்ளன. அய்யனாரின் முடியமைப்பு பொதுவாகக் காணப்படுவது போலன்றிப் பந்துபோன்று சுற்றப்பட்டுக் காட்டப் பட்டுள்ளது. பல்லவர் சோழர் இடை மாறு பாட்டுக் காலத்தைச் சார்ந்த இச்சிற்பம் அய்யனார் சிற்பத்தின் பரிணாம வளர்ச்சியை அறிந்து கொள்ளப் பேருதவி புரிகிறது.<br><br>துர்க்கை சிற்பம் எண்கரங்களில் ஆயுதங்கள் ஏந்தி எருமைத்தலை மீது நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. சங்கு சக்கரம் பிரயோக நிலையில் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் ஆடை அணிகள் பிற்காலப் பல்லவர் கலைப்பணிக்குச் சான்று கூறுகின்றன. | 20-9-98 |

# அரிய கண்டுபிடிப்புகள்

| எண் | பொருள் | கண்டுபிடித்தவர்கள் |
|---|---|---|
| | | திருவாளர்கள் : |
| 1. | பண்டைத் தமிழ்க் கல்வெட்டு | சு. இராசகோபால் (க.வெ.ஆ.)<br>செ. போசு (கா-ர்)<br>கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்கள் |
| 2. | பண்டைத் தமிழ்க் கல்வெட்டு | சு. இராசகோபால் (க.வெ.ஆ.)<br>வெ. வேதாசலம் (க.வெ.ஆ.)<br>சொ. சாந்தலிங்கம் (தொ-அ) |
| 3. | தத்தாத்ரேயர் சிற்பம் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>து. துளசிராமன் (கா-ர்) |
| 4. | கல்தொட்டி | நடன. காசிநாதன் (இ-ர்)<br>து. துளசிராமன் (கா-ர்) |
| 5. | லிங்கோத்பவர் (அ) திரிமூர்த்தி சிற்பம் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>கி. ஸ்ரீதரன் (ப-அ)<br>எஸ். கிருஷ்ணமூர்த்தி (தொ-அ) |
| 6. | காசு | பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி சாந்தா, திருவான்மியூர் |
| 7. | கண்ட கோபாலன் காசு | நடன. காசிநாதன் (இ-ர்)<br>மா. சந்திரமூர்த்தி (ப-அ) |
| 8. | சுடுமண் பொம்மை | ச. செல்வராஜ் (தொ.அ) |
| 9. | ஓவியம் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>வெ. வேதாசலம் (க.வெ.ஆ.) |
| 10. | சுடுமண் பொம்மைகள் | சீ. வசந்தி (வ.மு.அ.)<br>பெ. கௌதமபுத்திரன் (தொ-அ) |
| 11. | சுடுமண் பொம்மை | இரா. ப. கருணானந்தம் (க.வெ.ஆ. |
| 12. | நடுகல் | க. குழந்தைவேலன் (அ-ர்)<br>கொடுமுடி சண்முகம்; பொறியாளர் |
| 13. | பண்டைத் தமிழ்க் கல்வெட்டு | மா. சந்திரமூர்த்தி (ப-அ) |
| 14. | நினைவுக்கல் | கோ. முத்துசாமி (க.வெ.ஆ) |
| 15. | ஓவியம் | மா. சந்திரமூர்த்தி (ப.அ) |
| 16. | நடுகல் | அ. வசந்த கல்யாணி (க.வெ.ஆ) |
| 17. | துர்க்கை சிற்பம் | கு. தாமோதரன் (து.இ.ர்)<br>வெ. இராமமூர்த்தி (க.வெ.ஆ) |
| 18. | முருகன்(அ)இந்திரன் சிற்பம் | கோ. முத்துசாமி (க.வெ.ஆ) |
| 19. | நடுகல் | கோ. அர்ச்சுனன் (க.வெ.ஆ)<br>மே. சீனிவாசன் (இ.நி.க.வெ.ஆ)<br>பி. முருகேசன் (க.வெ.சி) |
| 20. | நடுகல் | கோ. அர்ச்சுனன் (க.வெ.ஆ)<br>பி. முருகேசன் (க.வெ.சி) |
| 21. | நினைவுக்கல் | கோ. அர்ச்சுனன் (க.வெ.ஆ)<br>மே. சீனிவாசன் (இ.நி.க.வெ.ஆ)<br>பி. முருகேசன் (க.வெ.சி) |
| 22. | டேனிஷ் காசு | அ. இராசேந்திரன் (கா-ர்) |
| 23. | சீனக்குடுவை | அ. இராசேந்திரன் (கா-ர்) |
| 24. | சதுரக்காசு | தேவதாசு (பயிற்சி மாணவர்) |
| 25. | கல், செம்புச் சிலைகள் | நா. கணேசன் (கா-ர்) |
| 26. | குமிழிக் கல்வெட்டு | கி. ஸ்ரீதரன் (ப.அ) |
| 27. | மோதிரம் | கோ. அர்ச்சுனன் (க.வெ.ஆ) |

| | | |
|---|---|---|
| 28. | மோதிரம் | கு. தாமோதரன் (து.இர்)<br>கி. ஸ்ரீதரன் (ப.அ)<br>கோ. அர்ச்சுனன் (க.வெ.ஆ) |
| 29. | காசு | கோ. அர்ச்சுனன் (க.வெ.ஆ.) |
| 30. | காசு | சொ. சாந்தலிங்கம் (தொ-அ) |
| 31. | செப்பேடு | இரா. முத்து (தொ-அ) |
| 32. | நாயக்கர் கால ஓவியம் | கி. ஸ்ரீதரன் (ப.அ)<br>ஸ்ரீவத்சன், திருவரங்கம் |
| 33. | முதுமக்கள் தாழி பொம்மை | அ. இராசேந்திரன் (கா-ர்) |
| 34. | பல்கைக்கல்வெட்டு | நடன காசிநாதன் (இ-ர்)<br>மா. கலைவாணன் (கா-ர்)<br>வெ. இராமமூர்த்தி (க.வெ.ஆ.) |
| 35. | பலகைச்சிற்பம் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>மா. கலைவாணன் (கா-ர்)<br>அருண் (ஸ்தபதி) |
| 36. | விநாயகர் சிற்பம் | கு. தாமோதரன் (து.இ-ர்.) |
| 37. | துர்க்கை சிற்பம் | நடன காசிநாதன் (இ-ர்) |
| 38. | மதகுக் கல்வெட்டு | கி. ஸ்ரீதரன் (ப-அ)<br>மே. சீனிவாசன் (இ.நி.க.வெ.ஆ) |
| 39. | செப்புத்திருமேனி | கி. ஸ்ரீதரன் (ப-அ) |
| 40. | செப்பேடு | தாமரைக் கண்ணன், அச்சிறுபாக்கம் |
| 41. | இராசராசன் தூண் கல்வெட்டு | சொ. சாந்தலிங்கம் (தொ.அ) |
| 42. | அய்யனார் சிற்பம் | அ. இராசேந்திரன் (கா-ர்) |
| 43. | உவா ஏர்க்கல்வெட்டு | வெ. இராமமூர்த்தி (க.வெ.ஆ.) |
| 44. | ரோமானியக்காசு | அ. அப்துல் மஜீத் (தொ.து.க.)<br>சீ. வசந்தி (வ.மு.அ.)<br>எஸ். பரணன் (கா-ர்)<br>நா. கணேசன் (கா-ர்) |
| 45. | நடுகல் | கி. ஸ்ரீதரன் (ப.அ) |
| 46. | செப்பேடுகள் நான்கு | இரா. ப. கருணாநந்தன், (க.வெ.ஆ)<br>வெ. வேதாசலம் (க.வெ.ஆ) |
| 47. | காசுகள் | நா. கணேசன் (கா-ர்) |
| 48. | பாறை ஓவியங்கள் | ஆர். பூங்குன்றன், (கா-ர்)<br>பசவலிங்கம், உதகை |
| 49. | கண்மாய்க்கல்வெட்டு | நடன. காசிநாதன் (இ-ர்)<br>க. குழந்தைவேலன் (அ-ர்)<br>சண்முகம், கொடுமுடி |
| 50. | கிளிஞ்சல் கல்வெட்டு | மா. சந்திரமூர்த்தி (ப-அ) |
| 51. | பஞ்சலோக விளக்கு | தி. சுப்பிரமணியம் (கா-ர்)<br>புது. பொ. வெங்கடராமன் |
| 52. | சிற்பங்கள் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>எஸ். சம்பத் (கா-ர்) |
| 53. | கட்டடப்பகுதி | கிருஷ்ணமூர்த்தி (உ.செ.பொ)<br>குணசேகரன் (உ.பொ)<br>பழனிச்சாமி (ஸ்தபதி) |
| 54. | அய்யனார் சிற்பம் | கி. ஸ்ரீதரன் (ப-அ)<br>ஜெயராமன் (இ.நி.க.வெ.ஆ)<br>இராமன் (ஸ்தபதி) |
| 55. | சுடுமண் பொம்மை | தி. சுப்பிரமணியம் (கா-ர்)<br>ச. செல்வராஜ் (தொ-அ) |
| 56. | புதியகற்காலக் கருவிகள் | வெ. வேதாசலம், (க.வெ.ஆ)<br>சொ. சாந்தலிங்கம் (தொ.அ) |
| 57. | நடுகல் | அர. வசந்தகல்யாணி (க.வெ.ஆ)<br>பி. முருகேசன் (க.வெ.சி) |
| 58. | துர்க்கை சிற்பம் | கு. தாமோதரன் (து-இர்)<br>வெ. இராமமூர்த்தி (க.வெ.ஆ) |

| | | |
|---|---|---|
| 59. | பண்டைய புகார் குறித்த சான்றுகள் | தொல்பொருளாய்வுத்துறை, தேசியக் கடலாய்வு நிறுவனம்<br>நடன. காசிநாதன் (இ-ர்)<br>கு. தாமோதரன் (து-இர்)<br>அ. அப்துல் மஜீத் (தொ.து க)<br>மா சந்திரமூர்த்தி (ப-அ)<br>ச. செல்வராஜ் (தொ.அ)<br>எஸ். சம்பத் (கா-ர்)<br>ஸ்ரீகுமார் (தொழில்நுட்ப உதவியர்)<br>டாக்டர் எஸ்.ஆர். ராவ்<br>டாக்டர். வோரா<br>சுந்தரேசன்<br>கௌர்<br>ஷீலா திரிபாதி |
| 60. | நடுகற்கள் | கோ. அர்ச்சுனன் (க.வெ.ஆ)<br>யே. சீனிவாசன் (இ.நி.க.வெ.ஆ) |
| 61. | சேட்டைச் சிற்பம் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>து. துளசிராமன் (கா-ர்)<br>முத்து எத்திராசன், சென்னை |
| 62. | நடுகல் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>சு. இராசகோபால் (க,வெ.ஆ)<br>வீரராகவன் (ஆசிரியர்) விழுப்புரம் |
| 63. | சீனக்காசு | அ. இராசேந்திரன் (கா-ர்) |
| 64. | கல்வெட்டு | வெ. வேதாசலம் (க வெ.ஆ)<br>ஆர். பாலசந்திரன், திருத்தங்கல் |
| 65. | எழுத்துப் பொறித்த முரசு | பொ. இராசேந்திரன் (க.வெ ஆ) |
| 66. | சூலக்கல் கல்வெட்டுகள் | எம். பி. செல்வராஜ் (பயிற்சி மாணவர்) |
| 67. | முற்காலப் பாண்டியர் காலக் குடியிருப்புகள் | பொ. இராசேந்திரன் (க.வெ.ஆ)<br>சொ. சாந்தலிங்கம் (தொ.அ) |
| 68. | தூண்கல்வெட்டு | கி. ஸ்ரீதரன் (ப.அ)<br>புலவர் ஆ. சுப்பிரமணியன், திருச்சி |
| 69. | பௌத்தச் சிற்பம் | அர. வசந்தகல்யாணி (க.வெ.ஆ) |
| 70. | யானைச் சிற்பக்கல் | கி. ஸ்ரீதரன் (ப.அ)<br>இராமன் (ஸ்தபதி)<br>கந்தசாமி (காவலர்) |
| 71. | கற்சிற்பம் | கா. நெடுஞ்செழியன் (கா-ர்) |
| 72. | கல்வெட்டு | சா. ஜான்பீட்டர் (பயிற்சி மாணவர்) |
| 73. | கல்வெட்டு | எம். இராஜமாணிக்கம் (பயிற்சி மாணவர்) |
| 74. | உறை கிணறுகள் | கே. எஸ். சம்பத் (கா-ர்)<br>ஆனந்த கிருஷ்ணன் |
| 75. | மகாவீரர் சிற்பம் | து. துளசிராமன் (கா-ர்) |
| 76. | கல்வெட்டுகள் | மா. செந்தில் செல்வக்குமரன் (தொ.அ) |
| 77. | எல்லைக்கற்கள் | க. குழந்தைவேலன் (அ-ர்) |
| 78. | பாறை ஓவியங்கள் | அர. வசந்தகல்யாணி (க.வெ.ஆ) |
| 79. | கல்வெட்டு | க. குழந்தைவேலன் (அ-ர்) |
| 80. | கல்வெட்டு | க. ஈஸ்வரன் (பயிற்சி மாணவர்) |
| 81. | சுடுமண் பொம்மை | சந்திரவாணன் (கா-ர்) |
| 82. | பாறை ஓவியம் | மா. சந்திரமூர்த்தி (ப.அ) |
| 83. | சுடுமண் பொம்மை | நடன. காசிநாதன் (இ-ர்)<br>அ. அப்துல் மஜீத் (தொ.து.க)<br>சீ. வசந்தி (வ.மு.அ)<br>ச. கிருஷ்ணமூர்த்தி (தொ.அ)<br>க. நெடுஞ்செழியன் (கா-ர்) |
| 84. | தூண்கல்வெட்டு | எஸ். இராமச்சந்திரன் (கா-ர்) |

| | | |
|---|---|---|
| 85. | நடுகல் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>ஆர். பூங்குன்றன் (கா-ர்)<br>ச. செல்வராஜ் (தொ-அ) |
| 86. | கல்வெட்டு | து. துளசிராமன் (கா-ர்)<br>வெ. இராமமூர்த்தி (க.வெ.ஆ) |
| 87. | சிற்பங்கள் | இரா. செல்வராசு (தொ.அ)<br>இரா. ப. கருணானந்தன் (க.வெ.ஆ) |
| 88. | சிற்பங்கள் | பயிற்சி மாணவர்கள் |
| 89 | கல்வெட்டு | கி. ஸ்ரீதரன் (ப.அ)<br>திரு. இராஜநாயகம் (இந்து அறநிலையத்துறை ஆணையர்)<br>திரு முருகேசன் செயல் அலுவலர், மலைக்கோட்டை, திருச்சி |
| 90 | சிற்பம் | கி. ஸ்ரீதரன் (ப.அ)<br>ஏ. மனோகரன், திருச்சி |
| 91. | கல்வெட்டு | செ. மா. கணபதி (கா-ர்) |
| 92. | மகாவீரர் சிற்பம் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>து. துளசிராமன் (கா-ர்)<br>ப. வெங்கடேசன் (ஆசிரியர்) ஆர்க்காடு |
| 93. | அரசு முத்திரைச் சுவடி | செ. மா. கணபதி (கா-ர்) |
| 94. | புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடம் | மா. சந்திரமூர்த்தி (ப.அ)<br>து. ஈஸ்வரன் (கங்கவரம்) |
| 95. | பாறை ஓவியங்கள் | சு. இராசகோபால் (க.வெ.ஆ)<br>வெ. வேதாசலம் (க.வெ.ஆ)<br>ஐராவதம் மகாதேவன் (இ.ஆ.ப)<br>அளக்குடி ஆறுமுக சீதாராமன் |
| 96. | கப்பல் உருவம் கொண்ட பானையோடு | அப்துல் மஜீத் (தொ.து.க)<br>து. துளசிராமன் (கா-ர்)<br>ச. செல்வராஜ் (தொ.அ) |
| 97. | முருகன் சிற்பம் | மா. சந்திரமூர்த்தி (ப.அ) |
| 98 | புத்தர் சிற்பம் | நடன. காசிநாதன் (இ-ர்) |
| 99. | ஏரிக்கரைக் கல்வெட்டு | கி. ஸ்ரீதரன் (ப.அ)<br>முருகேசன் (மாணவர்) |
| 100. | கோயிற் சிற்பங்கள் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>கோ. அர்ச்சுனன் (க.வெ.ஆ)<br>வெ. இராமமூர்த்தி (க.வெ.ஆ) |
| 101. | உறைகிணறு | முத்து காமாட்சி, செயற் பொறியாளர்<br>கிருஷ்ணமூர்த்தி (உ.செ.பொ)<br>குணசேகரன் (உ.பொ) |
| 102. | கல்வெட்டு | சு. இராசகோபால் (க.வெ.ஆ)<br>வெ. வேதாசலம் (க.வெ.ஆ)<br>பழனியப்பன், ஜம்பை |
| 103. | நடுகல் | கோ. முத்துசாமி (க.வெ.ஆ.) |
| 104. | புத்தர் சிலை | க. நெடுஞ்செழியன் (கா-ர்)<br>இராமசாமி, சின்னமேடு |
| 105. | ஏழுகன்னியர் | இரா. முத்து (தொ.அ) |
| 106. | நுண்கற்காலக் கருவிகள் | தே. கோபாலன் (தொ.அ) |
| 107. | அய்யனார் சிற்பம் | நடன. காசிநாதன் (இ-ர்)<br>நாராயணசாமி<br>முத்து எத்திராசன், சென்னை |
| 108. | ,, ,, | நடன. காசிநாதன் (இ-ர்)<br>முத்து எத்திராசன், சென்னை<br>தாமரைக்கண்ணன், அச்சரப்பாக்கம்<br>செ. சுந்தரம், வெள்ளையாம்பட்டு |
| 109. | அரிய பொருட்கள் அழகன்குளம் அகழாய்வு | நடன. காசிநாதன் (இ-ர்)<br>கு. தாமோதரன் (து.இ-ர்)<br>ச. செல்வராஜ் (தொ.அ)<br>நா. கணேசன் (கா-ர்)<br>கோபால் |

110. அரிய பொருட்கள்
கொடுமணல் அகழாய்வு
நடன. காசிநாதன் (இ-ர்)
அ. அப்துல் மஜீத் (தொ.து க.)
இரா. செல்வராசு (தொ.அ)
பெ. கௌதமபுத்திரன் ,,

111. சுடுமண் பொம்மைகள்
பூம்புகார் அகழாய்வு
நடன. காசிநாதன் (இ-ர்)
அ. அப்துல் மஜீத் (தொ து.க.)
க. குழந்தைவேலன் (அ-ர்)
இரா. முத்து (தொ.அ)

112. அரிய பொருட்கள்
அழகன்குளம் அகழாய்வு
நடன காசிநாதன் (இ-ர்)
கு. தாமோதரன் (து.இ-ர்)
து. துளசிராமன் (கா-ர்)
ச. செல்வராஜ் (தொ.அ)
நா. கணேசன் (கா-ர்)

113. அரிய பொருட்கள்
கொடுமணல் அகழாய்வு
நடன. காசிநாதன் (இ ர்)
அ. அப்துல் மஜீத் (தொ.து.க.)
இரா. செல்வராசு (தொ.அ)
பெ. கௌதமபுத்திரன் (தொ.அ)
சி. முனுசாமி (கா-ர்)

114. அரிய பொருட்கள்
பூம்புகார் அகழாய்வு
நடன. காசிநாதன் (இ-ர்)
அ. அப்துல் மஜீத் (தொ.து.க)
க. குழந்தைவேலன் (அ-ர்)
தி. சுப்பிரமணியன் (கா-ர்)
இரா. முத்து (தொ.அ)
க. நெடுஞ்செழியன் (கா-ர்)

115. கற்சிற்பங்கள் — இரா. முத்து (தொ.அ)

116. கற்சிற்பம் — இரா. முத்து (தொ.அ)

117. நடுகல் — ஆ. பத்மாவதி (க.வெ.ஆ.)

118. செப்புக்காசுகள் — நா. கணேசன் (கா-ர்)

119. சுடுமண் பொம்மை — கோ. முத்துசாமி (க.வெ.ஆ)

120. சிற்பத்தொடர் — நடன. காசிநாதன் (இ-ர்)

121. அய்யனார் சிற்பம்
நடன. காசிநாதன் (இ-ர்)
மா. சந்திரமூர்த்தி (ப.அ)
ச. கிருஷ்ணமூர்த்தி (தொ-அ)
முனைவர். விசயவேணுகோபால்,
மதுரை

122. களிமண், செப்புத்தகடுகள்
நடன. காசிநாதன் (இ-ர்)
ஆர். பூங்குன்றன் (கா-ர்)
ஐ. இராமசாமி

123. சிற்பங்கள்
நடன. காசிநாதன் (இ-ர்)
ஆ. பத்மாவதி (க.வெ.ஆ.)
சீ. வசந்தி (வ.மு.அ.)
திருஞானசம்பந்தம்

124. கல்வெட்டு
சு. இராசகோபால் (க.வெ.ஆ.)
ஆ. பத்மாவதி (க.வெ.ஆ.)
பொ. இராசேந்திரன் (க.வெ.ஆ)
புலவர். அ. பழனியப்பன்

125. சிற்பங்கள்
கு. தாமோதரன் (து.இ-ர்)
திருமதி & திரு. வீரராகவன்,
விழுப்புரம்

---

| | | |
|---|---|---|
| இ-ர் | : | இயக்குநர் |
| து-ர் | : | துணை இயக்குநர் |
| தொ.து.க. | : | தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் |
| ப.அ | : | பதிவு அலுவலர் |
| க.வெ.ஆ. | : | கல்வெட்டாய்வாளர் |
| கா-ர் | : | காப்பாட்சியர் |
| தொ.அ | : | தொல்லியல் அலுவலர் |
| வ.மு.அ. | : | வரலாற்றுக்கு முற்பட்ட அகழாய்வாளர் |
| இ.நி.க.வெ.ஆ. | : | இளநிலைக் கல்வெட்டாய்வாளர் |
| அ-ர் | : | அகழாய்வாளர் |
| செ.பொ. | : | செயற்பொறியாளர் |
| உ.செ.பொ. | : | உதவிச் செயற்பொறியாளர் |
| இ.நி.பொ. | : | இளநிலைப் பொறியாளர் |